சுவடி : 45
ஏடு : 06
பிப்ரவரி - 2021

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

✶

ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா. பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**சா. குப்பன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி. துரைசித்தார்த்தன்**
முனைவர் முத்தமிழ்

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**
**'சிந்தனையாளன்'**
**பெரியார் ஈ.வெ.ரா - நாகம்மை அறக்கட்டளை வளாகம்**
மனை எண் 277 / 2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை
அம்பத்தூர்
சென்னை - 600050.

கைப்பேசி
**94448 04980**
**86681 09047**
**95975 26990**

மின்னஞ்சல்
**sinthanaiyalantamilmonthly@gmail.com**

✶

இதழ் வடிவமைப்பு
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179


✶

இணையத்தில் படிக்க
**www.keetru.com**

**SINTHANAIYALAN**
**February - 2021**



# நன்றி! நன்றி! நன்றி!
# சிந்தனையாளன் பொங்கல் மலர் 2021
# சுயமரியாதை சமதர்ம மாநாடு
## வெற்றிபெற உழைத்த எல்லோருக்கும் நன்றி!



2020 திசம்பர் திங்கள் முதல் கிழமையில் அய்ந்தாம் முறையாகச் சாவின் விளிம்பைத் தொட்டு விட்ட நான், வயிற்றுக்கோளாறு ஏற்பட்டு உப்புச்சத்து குறைந்து, அரைகுறை நினைவோடு நிலையற்று இருந்த நிலையில், 21.12.2021-இல், தாம்பரம் ஏ.ஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எனக்கு என்ன ஆயிற்று என்று இன்னும் என்னால் முழுமை யாக அறிந்துகொள்ள முடியவில்லை.

அந்த நிலையில், 10.01,2021-இல் நடைபெறுவதாக இருந்த சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2021 வெளியீடு, சுயமரியாதை சமதர்ம மாநாடு நிகழ்ச்சிகளை, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமைக்குழுவினர் கூடி 31.01.2021-க்குத் தள்ளி வைத்துள்ளனர். அதைக்கூட அறிந்துகொள்ள முடியாத நிலையில் இருந்த நான், தொடர் மருத்துவத்திற்காக சென்னை, ஓமந்துரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தேன். உள்ளிருப்பு நோயாளியாகச் சிகிச்சை பெற்று ஓரளவு தேறியிருந்த நிலையில், மருத்துவமனையில் திசம்பர் இதழில் வெளிவந்த மாநாட்டு அறிவிப்புச் செய்தியை வாலாசா வல்லவனும், முனைவர் முத்தமிழும் காண்பித்தனர். ஏன் ஒத்தி வைத்தீர்கள் என்று மட்டும் வினவினேன்.

02.01.2021இல் மருத்துவமனையிலிருந்து தாம்பரத்திலுள்ள என் தலைமகன் ஆனை. பன்னீர்செல்வம் வீட்டிற்குத் திரும்பிய நான், ஒரு கிழமை கழித்து புதுச்சேரியிலுள்ள என் இரண்டாவது மகன் வெற்றி வீட்டுக்குச் சென்றுவிட்டேன். அவ்வப்போது பொங்கல் மலர், மாநாட்டு வேலைகள் குறித்து வல்லவன், முத்தமிழ், துரைசித்தார்த்தன் ஆகியோரிடம் கேட்டுக்கொண்டேன்.

அதன்பிறகு 31.01.2021இல் மாநாடு நடைபெற்ற சேப்பாக்கம் செய்தியாளர் அரங்கை அடைந்தபோது, அரங்கம் நிறைந்து தோழர்கள் என்னை வரவேற்றனர். மகிழ்ச்சியில் திளைத்தேன். சிந்தனையாளன் பொங்கல் மலரையும், சுயமரியாதை சமதர்ம மாநாட்டையும் காலம் கடந்தாலும் மாபெபொக தோழர்கள் கட்டுக்கோப்பாக இருந்து வெற்றியாக நடத்தி முடித்துள்ளனர். இந்தக் கொரானா காலத்திலும், பொங்கல் மலருக்கான விளம்பரங்களை ஏறக்குறைய சென்ற ஆண்டைப் போலவே எல்லோரும் கடுமையாக உழைத்துத் திரட்டியுள்ளனர். பொங்கல் மலர் பொலிவோடு வெளிவந்துள்ளது என்னை பூரிப்படைய வைத்தது.

இவை அனைத்தும் ஒரு தனியரின் வெற்றியல்ல. எல்லோருடைய உழைப்புக்கும் கிடைத்த வெற்றி. எல்லா மாவட்டச் செயலாளர்களுக்கும், கட்சிப் பொறுப்பாளர் களுக்கும் இந்நிகழ்வுகளுக்காக உழைத்த எல்லா கட்சித் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் கிடைத்த வெற்றி. என் மீதும், மா.பெ.பொ.க மீதும், சிந்தனையாளன் இதழ் மீதும் அன்பும் நம்பிக்கையும் பற்றும் கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் கிடைத்த வெற்றி. எல்லோரும் எனக்கு நம்பிக்கையூட்டி என் ஆயுளை நீட்டித்துள்ளீர்கள். எனக்கு நம்பிக்கையூட்டிய ஒவ்வொரு தோழருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி, நன்றி, நனி நன்றி!

03.02.2021

**வே. ஆனைமுத்து**



# மாபெபொக வாணியம்பாடி நகரச் செயலாளர்

# அன்புத் தோழர் சீனி. பழனி களப்பணியை நிறுத்திக்கொண்டார்..!

## வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரிக்குக் கொடையளிக்கப்பட்டார்

மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சியின் வாணியம்பாடி நகரச் செயலாளர், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகளுக்கு திருப்பத்தூர் மாவட்டங்களில் பெரும்பங்காற்றியவர் தோழர் சீனி. பழனி அவர்கள் உடல்நலம் குன்றியிருந்த நிலையில் 01.02.2021 திங்கள் காலை நம்மைவிட்டுப் பிரிந்தார்.

இரண்டு மாதத்திற்கு முன்பாக தோழர் ஆனைமுத்து அவர்கள் உடல் குன்றியிருக்கும்பொழுது தாம்பரத்தில் அவரது இல்லத்தில் சந்தித்து, "அய்யாவை எப்படியேனும் காப்பாற்றிடவேண்டும்; அவருக்கு இன்னும் உயர் மருத்துவம் கொடுப்பதற்கு எல்லா முயற்சியும் எடுங்கள் தோழர்" என்றும், "இவ்வளவு உடல் நலிவுற்றிருக்கிற நிலையில் அய்யாவை விட்டுவிட்டு ஊர் திரும்பவேண்டுமா? நான் மருத்துவமனையில் அய்யாவோடு இருக்கிறேன் தோழர்" என்றும் சொல்லி ஊர் செல்ல மனமின்றி திரும்பினார்.

வாணியம்பாடி திரும்பிய இரண்டாம் நாளே திடுமென மூளையில் குருதிக் கசிவு ஏற்பட்டு, வாணியம்பாடி அரசு மருத்துவமனையிலும் தொடர்ச்சியாக தோழர்களின் உதவியால் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் தொடர் மருத்துவம் பார்த்து வந்தார். மருத்துவக்கல்லூரி மருத்துவர்களிடம் தொடர்புகொண்ட போது "ஓரளவுக்கு மீண்டுவிட்டார்; குருதிக் கசிவால் ஏற்பட்ட தாக்கங்கள் குறையத் தொடங்கிவிட்டன" என்றனர். ஏறக்குறைய ஒருமாதமாக வீட்டிலும் தொடர்ச்சியாக பயிற்சியும் மருந்துகளும் எடுத்து வந்தார்.

பத்து நாட்கள் முன்பு தோழர் மதனகவி, "சீனி. பழனி மீண்டும் உடல்நலமின்றி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்" என்று கவலையோடு சொன்னார். ஓரளவு தேறியிருந்த நிலையில், நீரிழிவு நோய் - சர்க்கரை அளவு கடுமையான மாற்றத்திற்குள்ளாகி, சிறுநீர்த்தொற்றால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று மருத்துவர்கள் சொன்னதும் அதிர்ந்துபோனோம். எப்படியேனும் இம்முறையும் மீண்டுவிடுவார்; சென்னைக்கு, மாநாட்டுக்கு எழுந்து வருவார் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தோம். "மருந்துகளை அவருடைய உடல் ஏற்றுக்கொள்ளவில்லை; நீங்கள் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுங்கள்" என்று அடுக்கம்பாறையில் கூறிவிட்டனர். சென்னைக்கு அழைத்து வந்து தொடர்மருத்துவம் பார்க்கத் தோழர்கள் மதனகவியும், செவ்வேளும் எண்ணியிருந்த நிலையில் திடுமென 1.2.2021 காலை ஆறு மணியளவில் அவர் நம்மைப் பிரிந்தார் என்ற செய்தியை திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா.மதனகவி கூறியது இடியாய் இறங்கியது. மனம் ஏற்க மறுத்தது. நெஞ்சம் பதறியது. ஒரு சீரிய தோழரை - தெளிவான சிந்தனையாளரை, ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளாக உற்ற துணையாக இருந்த தோழரை - சிறந்த களப்பணியாளரை மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி இழந்துவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக தோழர் ஆனைமுத்து மீது அளவற்ற அன்பு கொண்ட ஒரு மாமனிதரை இழந்துவிட்டோம்.

மாநாடுகளிலும், கூட்டங்களிலும், பொதுக்குழுவிலும் என்னிடம், "தோழர் நீங்கள் சரியாகப் பேசுகிறீர்கள், ஏன் உணர்வு வயப்படுகிறீர்கள்? அமைதியாகப் பேசுங்கள்! தொடர்ந்து பயணிப்போம்!" என்று ஆற்றுப் படுத்திய ஒரு அன்பொழுகும் தோழரை நானும் இழந்துவிட்டேன்.

நிற்க. 01.02.2021 அன்று மாலை 4 மணியளவில், வாணியம்பாடியில் அவர் தம் இல்லத்தில் திருப்பத்தூர் மாவட்ட மாபெபொக செயலாளர் நா. மதனகவி தலைமையில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில், பெ.உ.கூ வேலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.ப.சிவா, திருப்பத்தூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செவ்வேள், மா.பெ.பொ.க தோழர்கள் சா.குப்பன், முனைவர் முத்தமிழ், மோ.சி. சங்கர் மற்றும் எழுத்தாளர் அழகியபெரியவன், தோழர் முல்லை உள்ளிட்ட பல்வேறு இயக்கத் தோழர்களும் பற்றாளர்களும் வீரவணக்க உரை நிகழ்த்திய பின்னர் தோழர் சீனி. பழனி உடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு வேலூர் கிறித்தவ மருத்துவக்கல்லூரிக்குக் கொடையளிக்கப்பட்டது.

**சீனி. பழனி உடலால் பிரிந்தாலும் உள்ளத்தால், மார்க்சிய பெரியாரிய அம்பேத்கரிய நெறியில் அவர் ஆற்றிய களப் பணியால் நிலைத்து நிற்பார்.**

**களப்பணியாளர் சீனி பழனி புகழ் ஓங்குக!**

**- முனைவர் முத்தமிழ்**

## தோழர் சீனி. பழனி குடும்பத்துக்குத் தோள் கொடுப்போம்!

மாபெபொகவும் - ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பும் இணைந்து தோழர் சீனி. பழனி அவர்களின் படத்திறப்பும், குடும்பப் பாதுகாப்பு நிதியளிப்பும் விரைவில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. நம் தோழரின் குடும்பத்தைக் கைதூக்கிவிட பின்கண்ட வங்கிக் கணக்கில் பெருமளவில் நிதியளித்து உதவிட வேண்டுகிறோம்.

பெயர் : **நா.மதனகவி (N. MADANAKAVI)**

**இந்தியன் வங்கி** (Indian Bank) - வாணியம்பாடி கிளை

கணக்கு எண் : **824287204** IFSC : **IDIB000V008**

Google & Phone Pay : **86081 49016**

**தோழர் சீனி.பழனி படத்திறப்பு - குடும்ப நிதியளிப்புக் குழு**

**சா.குப்பன்** (மா.பெ.பொ.க), **செவ்வேள்** (த.ஒ.வி.இ)

**நா. மதனகவி** (மா.பெ.பொ.க), **இரா.ப.சிவா** (தி.வி.க),

**முல்லை** (இ.பொ.க) **உரூபன்** (த.தொ.ச.ந), **வேலு** (வி.சி.க)

# மக்களாட்சி முறையில்

# மொழிவழித் தேசிய இனங்களின் விடுதலை

(சனவரி - 2021 இதழின் தொடர்ச்சி)

பேராசிரியர் **த. செயராமன்**

தலைமை ஒருங்கிணைப்பாளர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு

### தமிழ்த் தேசிய இனத்தின் மீது சுமத்தப்படும் அழிவுத் திட்டங்கள்

மீத்தேன் திட்டம், ஹைட்ரோ கார்பன் திட்டம், பிற பெட்ரோலிய-எரிவளித் திட்டங்கள் என்று விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் முதல் இராமநாதபுரம் வரை நிலம் குடையப்படுகிறது. கனிமவளங்கள் சூறையாடப்படு கின்றன.

காவிரிப் படுகையே காணாமல் போகும் அபாயம் காத்திருக்கிறது. கடலூர், நாகை மாவட்டங்களில் 45 கிராமங்களில் பெட்ரோகெமிக்கல் மண்டலத்தை உரு வாக்க இருக்கிறார்கள். 57,345 ஏக்கர் நிலம் 45 கிராமங் களில் கையகப்படுத்தப்படுகிறது.

காவிரிப்படுகையில் நாகப்பட்டினம் மாவட்டம் நரிமணத்தில் முன்னமே பெட்ரோலியச் சுத்திகரிப்பு நிலையத்தால் பெருமளவில் நிலமும் நீரும் பாதித் திருக்கும் நிலையில், மேலும் 'காவிரி பேசின்' ரிபைனரி என்ற பெயரில், 650 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவாக்கம் செய்யப்பட இருக்கிறது. இதுவரை ஒரு மில்லியன் டன் சுத்திகரிப்பு செய்த இந்நிலையம், 10 மில்லியன் மெட்ரிக் டன்னாக திறன் உயர்த்தப்பட இருக்கிறது.

தேனி பொட்டிபுரத்தில் 'நியூட்ரினோ பன்னாட்டுப் பொது ஆய்வகம்' உருவாக்கப்படுகிறது. நியூட்ரினோ கற்றைகளை ஆய்வு செய்யும்போது அப்பகுதியே கதிர்வீச்சு மிக்கதாக மாறும் என்று அறிவியலாளர்கள் எச்சரித்துள்ளனர். ஆனால், அடாவடியாக தேனியில் நியூட்ரினோ ஆய்வகம் திணிக்கப்படுகிறது.

'சாகர்மாலா திட்டம்' என்ற பெயரில் தரைவழிச் சாலைகள், இரயில் பாதைகள், வானூர்தி வழிகள், நீர் வழிச் சாலைகள், துறைமுகங்கள் ஏற்படுத்தப்பட்டு தேசிய இனங்களின் இயற்கை வளங்களும், கனிம வளங்களும் சூறையாடப்பட்டு, பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட இருக்கின்றன.

நதிகள் இணைப்பு என்ற பெயரில் வடக்கே உள்ள 14 ஆறுகளும், தெற்கேயுள்ள 16 ஆறுகளும், 37 கால் வாய்கள் மற்றும் அணைகள் மூலம் இணைக்கப்பட்டு, ஆறுகள் இணைப்புக்கு முதலீடு செய்த பெரும் முதலாளிகள் அந்த நீரை விற்பனை செய்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தேசிய இனங்களின் ஆறுகளும் நீராதாரங்களும் பறிபோக இருக்கின்றன.

நீர் உரிமை மறுப்பு, நிலம் பறிப்பு, நீர் விற்பனை ஆகியவை தமிழ்த்தேசிய இனத்தை வதைக்கக் காத் திருக்கின்றன.

தமிழகத்தின் பல பகுதிகள் திட்டமிட்டு அழிக்கப்படு கின்றன. மக்கள் வாழ முடியாத நிலப்பகுதியாக காவிரிப் படுகையில் பல பகுதிகள் மாறியிருக்கின்றன. இந் நிலையில், தமிழக நீர், நிலம், ஆறுகள், கனிமவளம் ஆகியவற்றைக் காப்பதற்கு, தமிழக அரசு அல்லது தமிழகத்திலிருந்து டெல்லிக்குச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இயலாத நிலை உள்ளது.

**ஒரு தேசியஇனம் என்ற முறையில் தன் தாயகத்தின் மீது, தன் கனிம வளம், இயற்கை வளத்தின் மீது தமிழகம் உரிமை கோர முடியாத நிலை நிலவுகிறது.**

தேசிய இன அரசுகளை மிக அற்பமாக இந்திய அரசு கருதுகிறது. மரபு மீறி ஆளுநர் மூலம் நேரடியாக நிர்வாகத்தைக் கைக்கொள்ள ஒன்றிய அரசு துடிக்கிறது.

டெல்லியில் "அரவிந்த் கெஜ்ரிவாலின் அமைச்சரவைச் செயலை முடக்கும் துணைநிலை ஆளுநர் அனில் பைஜால் நடவடிக்கைகள் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது" என்று உச்ச நீதிமன்றம் 2018 சூலையில் கூறியது. அமைச்சரவையின் உதவி மற்றும் அறிவுரைப் படிதான் துணைநிலை ஆளுநர் செயல்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

புதுச்சேரியில் துணைநிலை ஆளுநர் கிரண்பேடி புதுவை நிர்வாகத்தை முடக்கி வருகிறார்.

தமிழ்நாட்டில் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அதுபோன்றே தமிழக நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிட்டு வருகிறார். ஆனால், தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி இதை எதிர்க்கவில்லை; ஏற்கிறார். தமிழ்நாடு அமைச்சரவையின் அறிவுரையைக் கேட் காமல், பரிந்துரையைப் பெறாமல் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை ஆளுநரே நியமிக்கிறார். அதிகாரி களைக் கூட்டி அரசின் வேலைகளையும், திட்டப் பணி களையும் நேரடியாக ஆளுநர் ஆய்வு செய்கிறார். இதைக் கண்டித்து கருப்புக் கொடி காட்டினால் 7 ஆண்டு சிறை என்று ஆளுநர் மிரட்டுகிறார்.

நீதிபதி தீபக் மிஸ்ரா, தனது தீர்ப்பில் "கூட்டுப் பொறுப்புடன் அமைச்சரவை எடுத்த முடிவை செயல் படுத்துவதற்கு உரிய முக்கியத்துவம் தராமல் ஆளுநர் தடையாய் இருந்தால் பிரதிநிதித்துவ ஆட்சி என்பது செல்லரித்துப் போகும்" என்று கருத்து தெரிவித்த பிறகும், தேசிய இனங்களின் மாநில அரசுகளை இந்திய வல் லாதிக்க அரசு பாடாய்ப்படுத்துகிறது. இந்திய சனநாயகத்தின் கோரமுகம் உலகுக்கு அப்பட்டமாய்த் தெரிகிறது.

**டெல்லி என்ற எஜமானன்**

1960-களில் அண்ணா இவ்வாறு எழுதினார் :

> *"மாநிலங்களிலே ஆட்சிபீடத்தில் அமர்த்தப் படுகிற எவரும் டெல்லி மூலவரின் ஆணைக் குக் கட்டுப்பட்டு அவர்கள் கிழித்த கோட்டைத் தாண்ட முடியாத வகையில் நடந்தாக வேண் டும். எஜமானனாக இருந்து டெல்லி அவர் களை ஆட்டிப்படைக்கும். எடுபிடிகளாக இருந்து குற்றேவல் புரிந்தாக வேண்டும், இவர்கள். அடிக்கொரு முறை காவடி எடுத்து 'ஐயனே...' 'மெய்யனே...' என்று அகவல் பாடி, தேவைகளை நேரம் பார்த்து, பக்குவமாக எடுத்துக்கூறி, கிடைத்ததைப் பெற்று, இயன் றால் மகிழ்ந்து, இல்லையானால் மனக் குமு றலை மிக ஜாக்கிரதையாக மூடி மறைத்து, 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற திருப்தியை வரவழைத்துக் கொள்ள வேண்டும்"*

இந்தியாவில் மாநிலங்களின் நிலையை அண்ணாவின் இந்த விவரிப்பைவிடச் சிறந்த முறையில் புரியவைக்க இயலாது.

பிரச்சனை ஆட்சியாளர்களிடம் இருக்கிறது என்று கருதி நல்லவர்களைத் தேடுவது மக்களுடைய இயல்பு. ஆனால், பிரச்சனை அரசியல் சட்டத்திலேயே இருக்கிறது. அதை எழுதியபோதும், செயல்பாட்டுக்கு வந்தபிறகும் அது பல தேசிய இனங்களுக்கும் எதிராகவே இருக்கிறது. டெல்லி என்பது எசமானனாகவும், மாநிலங்கள் அதற்குக் கீழ் நிலையில் இருந்து கைக்கட்டி நிற்கக் கூடிய வேலைக் காரனாகவும் இருக்கின்றன என்பதுதான் உண்மை.

அரசியல் சட்டம் எழுதும்போது இருந்த நிலையை கே.வி.ராவ் இவ்வாறு விவரிக்கிறார் :

> *"காங்கிரசுக்குத்தான் இந்தியா முழுவதும் பேசும் உரிமை உண்டு, மற்றவர்களுக்கு இல்லை என்கிற கருத்து பரவியிருந்தது. எல்லா விவ காரங்களும் காங்கிரசுக் கட்சியின் சொந்த வீட்டு விவகாரமாகக் கருதப்பட்டது... அரசியலமைப்புச் சட்டம் காங்கிரசுக் கட்சியால் இந்தியா மீது திணிக்கப்பட்டது."*

மாற்றுக் கருத்துடையவர்கள் எவரும் தங்கள் கருத்தை வலியுறுத்த வாய்ப்பே இல்லை என்பது மட்டுமன்றி, இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருந்த அன்றைய சூழலில் மற்றவர் களுடைய வாய் திறக்கவே இல்லை.

அரசியல்சட்ட அவையில் இருந்த கே.வி. சந்தானம் இவ்வாறு பதிவு செய்கிறார் :

> *"பிரிட்டிஷ் அரசை வன்மையாக எதிர்த்து வந்த இந்தியத் தலைவர்கள், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிலைநாட்டும் நோக்கத்துடன் உரு வாக்கிய ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை அப்படியே அடிமைத்தனத்துடன் ஏற்றுக் கொண்ட அசாதாரணமான உண்மையை விளக்குவது சுலபமானது அன்று"*

1935-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு கொண்டுவந்த இந்திய அரசாங்கச் சட்டத்தை விமர்சித்த காங்கிரசு, அரசியல் சட்டம் எழுதும்போது அதன் பெரும்பகுதியை அப்படியே புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் புகுத்திக் கொண்டது. பல்வேறு தேசிய இனங்களை அடக்கியாள அச் சட்டம் சிறந்ததாகக் காங்கிரசுக்குத் தோன்றியது எனக் கருதலாம்.

பல்தேசிய இன நாடாகிய இந்தியாவுக்கு எழுதப்படும் ஓர் அரசியலமைப்புச் சட்டத்தில் தேசிய இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கூறுகள் சேர்க்கப்பட வில்லை. அரசியலமைப்புச் சட்டத்தை எழுதியவர்களுக்கு அந்த நோக்கமும் இல்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் நிறைந்த அவை என்று சொல்லக்கூடிய வகையில் அரசியல் நிர்ணயசபை அமையவில்லை. இந்தியாவுக்கு என்று ஒரு கூட்டாட்சி அரசியல் அமைப்பை எழுதுவதாகக் கூறிக் கொண்ட நிலையில், 'கூட்டாட்சி' என்ற சொல்லைக் கூட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்க மறுத்தனர்.

பேராசிரியர் கே.டி. ஷா இவ்வாறு குறிப்பிடுகிறார் :

*"There will have to be equality of states' powers and functions as between the several members, which I wish to ensure by this amendment by adding the word, federal..."*

> *"கூட்டாட்சி உறுப்பு மாநிலங்களிடையே அதிகாரம், வேலை ஆகியவற்றில் சமத்துவம் இருக்க வேண்டும், இதை உறுதிப்படுத்தும் வகையில் 'பெடரல்' (கூட்டாட்சி) என்ற சொல்லைச் சேர்க்கும் திருத்தத்தைச் செய்ய வேண்டும்."*

என்று கே.டி.ஷா கூறியதை அரசியல் நிர்ணய அவையில் ஏற்க மறுத்துவிட்டனர்.

அசோக் சந்தா தம் '*Federalism in India*' என்ற நூலில் இவ்வாறு கூறுகிறார் :

> *"மாநில அதிகாரத்துக்கு இவ்வளவு இழிவு எந்த அரசியல் சட்டத்திலும் இல்லை, 1935-ஆம் ஆண்டு சட்டத்திலும் கூட..!"*

*(There is no derogation of the state authority in any other constitution not even in 1935-Act)*

நாடாளுமன்றத்தில் எஸ்.என்.மிஸ்ரா இவ்வாறு குறிப்பிட்டார் :

> *"இந்தியாவில் 'மாநிலங்கள்' (States) என்பவை கிடையாது. அவையெல்லாம் மத்திய அரசின் எஸ்டேட்கள்தான்".*

1950-இல் இந்திய அரசியல் சட்டம் செயல்பாட்டுக்கு வந்த பிறகு அச்சட்டம், அனைத்து தேசிய இனங்களையும் ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

'கூட்டாட்சி' என்ற சொல் கூட இல்லாத ஒரு அரசியல் சட்டத்தை வைத்துக்கொண்டு, 'கூட்டாட்சி இந்தியா' பற்றி அனைவரும் பேசிப்பேசி புளகாங்கிதம் கொள்கிறார்கள்.

இந்திய அரசியலமைப்பு தேசிய இனங்கள் பற்றி பரிசீலனைக்குக் கூட ஏற்கவில்லை.

கிரன் வில்லி ஆஸ்டின்,

> *“ஒரே கட்சி உள்ள நாட்டில் ஒரே கட்சியினர் நிறைந்த அவையாக அரசியல் நிர்ணயசபை இருந்தது”*

என்று குறிப்பிடுகிறார்.

1935-ஆம் ஆண்டு சட்டப்படி வாக்குரிமை அளிக்கப் பட்டவர்கள் 14% மட்டுமே. அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாகாண சட்டமன்ற உறுப்பினர்களால் அரசியல் சட்ட அவைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், 93 பேர் சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் முஸ்லிம் பிரதிநிதிகள். முஸ்லிம் லீகு இந்திய விடுதலைக்குப் பிறகு அதில் பங்கேற்கவில்லை.

1947-ல் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின்போது நிகழ்ந்த படுகொலைகள் காரணமாக எவரும் மாகாண சுயாட்சி பற்றி வாயே திறக்கவில்லை.

1931 காந்தி வட்டமேசை மாநாட்டில் கூட்டாட்சி முறையை வலியுறுத்தியிருந்தார். அதன்படி கூட்டாட்சி முறை ஏற்கப்பட்டது.

ஆனால், அதன் பண்புகள் முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட்டு, “தோற்றத்தில் கூட்டாட்சி, ஆனால் நடைமுறையில் ஒற்றையாட்சி” என்ற ஒரு புது வகையான அரசியல்சட்டம் உருவாக்கப்பட்டது. இந்தியா என்ற பல்தேசிய இன நாட்டிற்கு ஒத்துவராத ஒரு அரசிய லமைப்பு முறையை வரைவு செய்து ஏற்றனர்.

இதைத்தான் கே.சி.வியர், ‘அரைகுறைக் கூட்டாட்சி’ (Quasi Federal) என்று அழைக்கிறார்.

கூட்டாட்சி போலத் தோற்றமளித்து, உன்மையில் ஒற்றையாட்சியாகவும், திடீரென்று முழுமையான சர்வாதி காரியின் அதிகாரங்களுடன் கூடியதாக மாறும் இயல் புடனும் செயல்படும் இந்திய அரசியலமைப்பை ‘பாசாங்குக் கூட்டாட்சி’ (Feigning Federal) என்று அழைப்பது மிகவும் பொருத்தமானது.

### இந்தியக் கூட்டாட்சியின் உண்மைத் தன்மையை அம்பலப்படுத்திய காஷ்மீர் விவகாரம்

2019 ஆகஸ்ட் 5ஆம் தேதி காஷ்மீருக்கு அளிக்கப் பட்டிருந்த சிறப்புத் தகுதியை உறுதி செய்கின்ற அரசியல் சட்டப் பிரிவு 370 நீக்கப்பட்டது.

நள்ளிரவில் இணையத் தொடர்பு, வெளிஉலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. ‘தீவிரவாதத் தாக்குதல்’ என்று கூறி முன்னமே புனிதப் பயணிகள் காஷ்மீரில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்கள். காஷ்மீர் அரசியல் தலைவர்கள் வீட்டைவிட்டு வெளியில் வர தடை விதிக்கப்பட்டது. பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி கோகாய் தலைமையி லான அமர்வு கூடத் திடீர் விடுப்பு எடுத்து இருந்தது. இதன்மூலம் இந்திய நீதித்துறையின் அரசியல் உள்ளீடு என்ன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறு 370-ஐ ஏற்றுக் கொள்வது என்ற நிபந்தனையின் பேரில்தான் இந்தியா வுடன் இணைந்திருக்க காஷ்மீர் ஒப்புதல் தந்தது.

“பாதுகாப்பு, தகவல் தொடர்பு, நிதித்துறை, வெளியுறவு ஆகியவை தவிர காஷ்மீர் தொடர்பாக எந்தச் சட்டம் இயற்றப்பட்டாலும் காஷ்மீர் சட்டமன்றம் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அச்சட்டம் காஷ்மீருக்குப் பொருந் தாது” என்று அரசியலமைப்புச் சட்டம் கூறு 370 கூறுகிறது.

ஆனால், இச்சட்டப்பிரிவையே நீக்கி, காஷ்மீரின் சிறப்புத் தகுதியை அழிக்கும் முன்மொழிவை அமித்ஷா செய்தார்; இதை ஏற்று, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டார்.

ஒரே உத்தரவில், அரசியலமைப்புச் சட்டம் அளித் திருந்த உறுதி, உத்தரவாதம் எல்லாம் காணாமல் போயின.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே இல்லாமல், மாநில அரசின் பெயரால், மத்திய அரசின் முகவராக நியமிக்கப்பட்ட ஆளுநரின் ஒப்புதலுடன், குடியரசுத் தலைவரின் ஒரே ஒரு உத்தரவு அரசியல் அமைப்புச் சட்டத்தில் உத்தரவாதப்படுத்தபட்டிருந்த சிறப்புத் தகுதி மட்டுமின்றி, காஷ்மீரின் மாநிலத் தகுதியையும் ஒழித்துக் கட்டியது.

ஜம்மு-காஷ்மீர் ‘சட்டமன்றம் பெற்றிருக்கும் யூனியன் பிரதேசம்’ என்றும், லடாக் அதுவும் இல்லாத ‘யூனியன் பிரதேசம்’ என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக வழியில் தேர்தல் அரசியலில் ஈடுபடக் கூடிய காஷ்மீர் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா, மகபூபா முப்தி, பாரூக் அப்துல்லா உள்ளிட்டோர் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

அரசியலமைப்புச் சட்டம் 370-ஐ நீக்கிவிட்டால் இந்தியா காஷ்மீரை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறது என்பதே பொருள்.

**அனைத்து மாநிலங்களுக்கும் சுதந்திரத்திற்கு முன்பு அளிக்கப்பட்ட உறுதியின்படி, அனைத்து மாநிலங்களுக்கும் காஷ்மீர் கொண்டிருந்த அதே தகுதியை வழங்குவதற்குப் பதிலாக, சிறப்புத் தகுதியை காஷ்மீர் சட்டமன்றத்தின் ஒப்புத லின்றி, நாடாளுமன்றத்தில் விவாதமுமின்றி, ஒரே உத்தர வில் ஒழித்துக் கட்டியிருக்கிறது இந்திய ஜனநாயகம்.**

இந்திய அரசு, அதன் உறுப்புகளான மாநிலங்களை உள்ளாட்சிகளைவிடக் கேவலமாக நடத்தி வருகிறது.

இங்கு, பிறநாடுகளில் தேசிய இனங்களின் போக்கு எப்படி இருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இங்கிலாந்து எனப்படும் ‘ஐக்கிய இராஜ்யம்’ என்ற அமைப்பிலிருந்து விடுபடுவதற்காக, சுதந்திரம் கோரி ஸ்காட்லாந்து ஸ்காட்டிஷ் மக்களிடம் கருத்து வாக்கெடுப்பு நடத்தியிருக்கிறது.

2014 செப்டம்பர் மாதம் ஸ்காட்லாந்தில் மக்களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஸ்காட்லாந்து தனி நாடாகப் பிரிந்து போவதற்கு 45% பேர் ஆதரவு தெரிவித்து

இருந்தனர். 55% பேர் பிரிட்டனிலிருந்து பிரிய வேண்டாம் என்று கருத்து தெரிவித்ததால் ஸ்காட்லாந்து பிரிட்டனின் ஒரு பகுதியாகத் தொடர்கிறது. "மீண்டும் வாக் கெடுப்பு வேண்டும்" என்று 2017-இல், முதல்வர் நிக்கோலோ சர்ஜன் ஸ்காட் லாந்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் இயற்றினார். மீண்டும் ஸ்காட்லாந்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட இருக்கிறது.

1999-இலேயே ஸ்காட்லாந்துக்கு என்று தனி நாடாளு மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்காட்லாந்து மக்கள் அடிமைப் பட்ட நிலையில் இல்லை. ஆனாலும்கூட, தாங்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில், தங்களின் உரிமைகள் முழுமையாக இருக்கவேண்டும் என்ற கருத்தோடு, ஸ்காட்லந்து தனிநாடு கோருகிறது.

தங்களுடைய தேசிய இறையாண்மையை மீட்டெடுப் பதற்காக ஸ்காட்லாந்து பிரிந்து செல்வது என்று முடி வெடுத்து, 2019-ஆம் ஆண்டில் மீண்டும் கருத்து வாக்கெடுப்பு நடத்த ஸ்காட்லாந்து தீர்மானித்திருந்தது. இங்கிலாந்து இதை சட்டவிரோதமாகக் கருதவில்லை. ஒரு தேசிய இனத்தினுடைய அடிப்படையான உரிமையாகவே அது கருதுகிறது.

ஸ்பெயின் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் கட்டலோனியா 32,114 ச.கி.மீ பரப்பும், 75,04,881 மக்கள் வகையும் கொண்ட ஒரு தேசிய இனம். 2017-இல், ஸ்பெயின் விதித்தத் தடையையும் மீறி, பிரிந்து செல்வது பற்றிப் பொது வாக்கெடுப்பு நடத்தியது. இதில் 90% மக்கள் தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளித்தனர். இக் கோரிக்கையை எழுப்பும் கட்டலோனியாவும் தனி நாடாளுமன்றத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால், இக் கோரிக்கையை ஸ்பெயின் ஏற்க முடியாதென்கிறது.

**ஸ்காட்லாந்தும், கட்டலோனியாவும் இந்தியாவில் உள்ள மாநிலங்களைப்போல மத்திய அரசின் முன்னிலையில், புழுக் கடையில் நின்று சோற்றுக்குக் கதறும் பிச்சைக்காரனைப் போல இல்லை. ஆனாலும், தாங்கள் ஒரு தேசியஇனம் என்ற வகையில் தங்களுக்கு எது சிறந்தது என்று பரிசீலித்துக் கோரிக்கையை வைக்கின்றன. இந்தியாவில் இதற்குப் பெயர் தேசவிரோதம், தீவிரவாதம்.**

ஒரு தேசிய இனம் தன் இறையாண்மையைப் போற்று வதை உலகம் ஏற்கிறது; சுயநிர்ணய உரிமையைக் கைக் கொள்வதை உலக அமைப்புகளும், பிரகடனங்களும் ஏற்கின்றன.

### அடுக்கடுக்கான தாக்குதல்கள்

'ஒரே நாடு, ஒரே கொடி' என்ற தேசியஇன அடையாள அழிப்புத் திட்டத்தை பாஜக அரசு முன்வைத்திருக்கிறது. திட்டக்குழுவை நீக்கிவிட்டு 'நிதிஆயோக்' என்னும் அமைப்பை இந்துத்துவத் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கத்தோடு கொண்டுவந்திருக்கிறது. ஆற்றுநீர் பகிர்வுத் தீர்ப்பாயங்களை அழிப்பதற்குச் சட்டத்திருத்தம் செய்திருக்கிறது. மாநிலங்கள் அவையின் ஏற்பு இல்லாமலே சட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் திருத்தங்களைக் கொண்டு வந்தது. அனைத்து நதிநீர்த் தீர்ப்பாயங்களையும் ஒழித்துக்கட்டிவிட்டு, இந்தியா முழுவதற்கும் ஒரே தீர்ப்பாயம் என்ற பெயரில் தேசிய இனங்களுக்குச் சொந்தமான ஆறுகளைக் கையகப் படுத்த முயற்சிக்கிறது.

மாநில அமைச்சரவை செய்யவேண்டிய வேலைகளை ஆளுநர் ஆய்வு என்ற பெயரில் மத்திய அரசே நேரடி யாக கைக்கொள்கிறது. தேசிய மருத்துவ ஆணைய மசோதா என்ற பெயரில் மருத்துவத் துறையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறது. கல்வி, பொதுப் பட்டியலில் இருப்பதைப் பயன்படுத்திக் கல்வித்துறையை முழுவதுமாகத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறது, இந்திய அரசு. இந்தியா முழுவதற்கும் தகுதித்தேர்வு முறையைப் புகுத்தி தொழிற் கல்வியையும் தன் கட்டுப் பாட்டில் கொண்டு வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் மாநிலத்தின் பொது விநியோகத் திட்டத்தை சிதைக்கிறது. மாநிலங்களின் நிதி ஆதாரத்தைக் குலைக்கும் வகையில் ஜி.எஸ்.டி வரியைப் புகுத்தியது. மாவட்ட நீதிபதிகளுக்கு அகில இந்தியத் தேர்வு என்று அறிவித்து கீழமை நீதிமன்றங்களிலும், வடஇந்தியர் களையும், இந்துத்துவத் தத்துவத்தில் பயிற்சி பெற்றவர் களையும் நிரப்பும் வேலையை நிறைவேற்ற முயற்சிக்கிறது.

### இந்திய மக்களாட்சியில் தேசிய இன உரிமைகள் பாதுகாக்கப்படுமா?

பதினெட்டு வயதான அனைவருக்கும் வாக்குரிமை இருப்பதால் இந்தியாவை ஒரு ஜனநாயக நாடாகக் கருதுவதும், அனைவருடைய உரிமைகளையும் வாக்குச் சீட்டு மூலம் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று நம்புவதும் தவறானது. அது ஈழமானாலும், இந்தியாவில் தமிழக மானாலும் தங்களுடைய தேசிய இன உரிமையை, அடையாளத்தை, மொழியை, தாயகத்தைப் பாதுகாத்துக் கொள்ள வாக்குச் சீட்டு என்பது பயன்படாது.

2009-இல் ஒன்றரை இலட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள இனவாத அரசை எதிர்த்து ஈழத் தமிழர் களால் வாக்குச்சீட்டைப் பயன்படுத்தி ஒன்றும் செய்ய முடியவில்லை. அதுபோலவே, ஈழத்தமிழர் படு கொலைக்கு எல்லா வகையிலும் உதவி செய்த இந்திய அரசை, தமிழக மக்கள் தங்களுடைய வாக்குச் சீட்டைப் பயன்படுத்தி எதுவுமே செய்யமுடியவில்லை.

2017 மார்ச் 30-ஆம் தேதி 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' இதழில், இந்தியக் கப்பல் படைத் தலைவர் சுனில் லம்பா, "இந்தியா அனைத்து உதவிகளையும் ஈழப்போரில் இலங்கை அரசுக்குச் செய்தது" என்று பதிவு செய்தார்.

இந்திய உளவுத்துறைதான் தமிழினத் துரோகி கருணாவை ஊட்டி பங்களாவில் வைத்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தயார் செய்தது. இறுதிக்கட்டப் போரின்போது, தமிழக மக்கள் ஈழப் போரைத் தடுத்து நிறுத்தும்படி மன்றாடினர். ஆனால், "போர் நிறுத்தம் கோருவது எங்கள் வேலை இல்லை" என்று இந்தியா கூறிவிட்டது. மாறாக ஈழப்போரில் சிங்களப் பேரினவாத அரசு வெற்றியடைய அனைத்து உதவிகளையும் இந்தியா செய்தது.

2009 மே பதினெட்டாம் நாள் இலங்கை குடியரசுத் தலைவர் ராஜபக்சே 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' இதழுக்கு இவ்வாறு செய்திப் பதிவு செய்தார் :

> *"இந்தியாவின் போரையே நாங்கள் நடத்தினோம்... இப்போரில் நாம் வெல்வதற்கு இந்தியாவின் உதவியும், அனுசரணையும் மிகவும் அவசியமானதாக இருந்தது. இந்தியப் பிரதமருக்கும், காங்கிரசுக் கட்சித் தலைவர் சோனியா காந்திக்கும் நாம் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்... இந்தியா நினைப்பதையும், விரும்புவதையும் செய்வதைக் காட்டிலும், வேறு முக்கியமான கடமை எனக்கு இருக்கவில்லை"*

என்று ராஜபக்சே பதிவுசெய்தார்.

ஈழத்தமிழர்களை அழிப்பதற்கு இந்தியா, ஆயுதம், தொழில்நுட்பம், ஆழ்கடல் கண்காணிப்பு, உளவுத் தகவல் பரிமாற்றம், இராணுவப் பயிற்சி என்று பல்வேறு வகைகளில் உதவி செய்தது. 2008-இல் ஈழப்போரை நடத்துவதற்கு 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்தியத் தரப்பில் சிவசங்கர மேனன், எம்.கே. நாராயணன், பிரணாப் முகர்ஜி ஆகியோரும், சிங்களத் தரப்பில் கோத்தபாய ராஜபக்சே, லலித் வீரதுங்க, பசில் ராஜபக்சே ஆகியோரும் உள்ள குழு போரை நடத்தியது. சர்வதேச அரங்கிலும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை இந்தியா தடுத்து நிறுத்தியது. ஐ.நா அதிகாரி விஜய் நம்பியார் ஈழத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பீடு செய்ய வழிவகுத்தார். தென்னாப்பிரிக்கா, மெக்சிகோ போன்ற நாடுகள் போரை நிறுத்தத் தீர்மானம் கொண்டுவந்தபோது, போரைத் தடுக்க வேண்டாம் என்று இந்தியா ஈழப்படுகொலையைத் தடையில்லாமல் நடத்த ஆவன செய்தது.

**இலங்கையும், இந்தியாவும் ஜனநாயக நாடுகள் என்றே அறியப்படுகின்றன. இந்த இரண்டு ஜனநாயக நாடுகளிலும் தேசிய இனப் படுகொலையை எதிர்த்து, வாக்குச் சீட்டைப் பயன்படுத்தி தமிழர்களால் என்ன செய்ய முடிந்தது?**

**வாக்குச்சீட்டு வலிமையற்றது**

கடந்த 16.11.2019 அன்று இலங்கை குடியரசுத் தலைவருக்கான தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில், இனப்படுகொலை செய்த கோத்தபய ராஜபக்சே 52.25% வாக்குகள் பெற்று, பெருவெற்றி அடைந்தார். தமிழர்களும், தமிழ் முஸ்லிம்களும் இனப்படுகொலை செய்த மகிந்த ராசபக்சே, அவருடைய தம்பி கோத்தபய ராஜபக்சே ஆகியோரை எதிர்த்து, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளித்தனர். ஆனால், தமிழர்களை இனப்படுகொலை செய்த கோத்தபய ராஜபக்சேவுக்கு பெருமளவில் சிங்களர்கள் ஆதரவு தெரிவித்து, அவருக்கு வெற்றி வாய்ப்பை அளித்தார்கள்.

2009 முள்ளிவாய்க்கால் படுகொலையின்போது, குடியரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சே, அப்போது பாதுகாப்பு துறை அமைச்சராக இருந்தவர் அவருடைய தம்பி கோத்தபய ராஜபக்சே. இப்போது கோத்தபய குடியரசுத் தலைவராகவும், அவருடைய சகோதரர் மகிந்த ராஜபக்சே பிரதமராகவும் பதவியேற்றுள்ளனர். இவர்களுக்குக் கிடைத்த வெற்றிக்குக் காரணம் தமிழர்களைப் பெருமளவில் இனப்படுகொலை செய்தார்கள் என்பதுதான்.

எப்படிப் பார்த்தாலும், இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதியில் இருக்கக்கூடிய தமிழர்களும், தமிழ் முஸ்லிம்களும் 30 சதவீதத்தைத் தாண்டவில்லை. அவர்கள் இலங்கையின் நிரந்தரச் சிறுபான்மையினர். ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் ஒரு நாட்டில், நிரந்தரச் சிறுபான்மையினராக உள்ள இவர்கள் தங்களுடைய வாக்குச் சீட்டின் மூலமாக எந்த அரசியல் மாற்றத்தையும் பெற்றுவிட முடியாது; தேர்தலில் வாக்குரிமையைப் பயன்படுத்துவதன் மூலமாக எப்போதும் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துவிட முடியாது.

கோத்தபய ராஜபக்சே, "எனக்கு வாக்களித்தவர்களும், வாக்களிக்காதவர்களும் என்பக்கம் வாருங்கள். ஒரே இலங்கையை உருவாக்க வேண்டும்" என்று கூறி பௌத்த, சிங்கள இன ஆதிக்கத்தை ஏற்கும்படி அழைக்கிறார். ஈழத்தில் சிங்களக் குடியேற்றங்கள் விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 2000 கோயில்கள் வரை உடைக்கப்பட்டுள்ளன. 90 சதவீதம் வாக்குகளைப் பெற்ற கோத்தபய சிங்களமயமாக்கலை விரைவுபடுத்தியிருக்கிறார்.

**ஈழத் தமிழர்கள் தங்கள் வாக்குச்சீட்டு மூலமாக எதைச் சாதிக்க முடிந்தது? அதைப்போன்றே, இந்தியாவில் தமிழர்களின் நிலை என்ன?**

8 கோடிப் பேர் கொண்ட தமிழகம், ஐரோப்பாவிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட ஜெர்மனிக்கு நிகரானது. ஆனால், இந்திய நாடாளுமன்றத்தில் தமிழக உறுப்பினர்கள் நிரந்தரச் சிறுபான்மையினர். இந்தி, சமஸ்கிருத, ஆரிய, இந்துத்துவ வெறியுணர்வு கொண்ட 225 மக்களவை உறுப்பினர்களின் கட்சி கடந்த ஒற்றுமைக்கு முன்பு தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதையும் சாதிக்க முடியவில்லை. 8 கோடிப் பேர் தமிழர்கள் இருந்தாலும்கூட, இந்திய நாடாளுமன்றத்தில் தேசிய இனங்களுக்கு எதிரான சட்ட திட்டங்களை நிறைவேற்றும் போது, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால், நாடாளுமன்றத்தில் தங்கள் இருப்பின் மூலமாக, சனநாயக மற்ற நடப்புகளுக்கு ஒரு சனநாயக அங்கீகாரத்தை வழங்கிவிடுகிறார்கள்.

இதைத்தவிர, தமிழகம் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை டெல்லிக்கு அனுப்புவதன் மூலமாக எதுவும் சாதித்துக் கொள்ள முடியவில்லை. எந்த விடயத்தில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்? எந்த இழந்துபோன உரிமையை மீட்டிருக்கிறார்கள்? அல்லது எந்த உரிமைப் பறிப்பைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்?

இனப்படுகொலை நடந்துகொண்டிருந்தபோது அதை இயக்கிக் கொண்டிருந்த இந்தியாவிடம் தமிழகத்தின் அனைத்து கட்சிகளும், ஒட்டுமொத்த மக்களும் போரை நிறுத்த ஆவன செய்யுமாறு தொடர்ந்து வேண்டுகோள் வைத்தனர்.

ஆனால் இந்தியா "போர் நிறுத்தம் கோருவது எங்கள் வேலை இல்லை" என்று கூறி விட்டது.

போர் முடிந்த பிறகு, ஐக்கிய நாடுகள் அவை, "ராஜபக்சே உள்ளிட்டோரைப் போர்க் குற்றவாளிகள்" என்றது. அதை இந்தியா ஏற்கவில்லை.

"நடந்தது இனப்படுகொலை" என்று உலகம் குற்றம் சாட்டியது; அதையும் இந்தியா ஏற்கவில்லை.

போர்க்குற்றவாளிகளும், இனப்படுகொலையாளர்களு மான சிங்கள ஆட்சியாளர்களைச் சர்வதேச அரங்கில் தொடர்ந்து காப்பாற்றும் வேலையை இந்தியா செய்து வருகிறது.

இந்நிலையில் தமிழகத்தால் எதைச் சாதிக்க முடிந்தது? இனப்படுகலைக்கு உள்ளாகி அனைத்தையும் இழந்து நிற்கும் ஈழத்தமிழர்களுக்கு என்ன சாதித்துக் கொடுத் திருக்கிறோம்? என்ற கேள்வி எழுகிறது.

இந்திய அரசைப் பற்றி நன்கு தெரிந்திருந்தும், ஈழத் தமிழர்களைக் காக்கவேண்டுமென்று இன்றளவும் வேண்டுகோள்களை மட்டும் தமிழகத் தலைவர்கள் வைப்பதன் நோக்கம் என்ன?

இந்தியாவில் தேசிய இனங்களின் பிரச்சனைக்கு இந்திய அரசியல் சட்டத்துக்குள் தீர்வு இல்லை. தீர்வு அரசியல் சட்டத்துக்கு வெளியில்தான் இருக்கிறது.

உலகின் மிக நீண்ட அரசியல் சட்டமான இந்திய அரசியல் சட்டம், இந்தியாவில் சாதி இருப்பதை ஏற்கிறது; மதங்கள் இருப்பதை ஏற்கிறது. ஆனால், ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் சமமான மக்கள் தொகை யைக் கொண்டிருக்கக்கூடிய தேசிய இனங்கள் இருப்பதை ஏற்கவே இல்லை. தேசிய இனங்களின் இருப்பையே ஏற்காத இந்திய அரசியல் சட்டத்தை ஒரு 'சனநாயகச் சட்டம்' என்று கூறுவது நகைப்புக்குரியது. அது ஒரு 'சனநாயக மறுப்பு ஆவணம்' ஆகும்.

ஒரு மனிதனின் உடலில் உயிர் இருப்பதைப்போல, ஓர் இனத்தின் இறையாண்மை அமைகிறது. உயிரற்ற உடலும் இறையாண்மையற்ற இனமும் ஒன்றுதான். அந்த இன இறையாண்மை சுயநிர்ணய உரிமையாக *(Right to Self-Determination)* வெளிப்படுகிறது.

ஓர் இனம் தன்னுடைய சமூக, பொருளாதார, அரசியல் கதிப்போக்கைத் தானே தீர்மானித்துக் கொள்ளும் அந்த உயரிய அதிகாரத்திற்குப் பெயரே 'தன்தீர்வு (தன் தீர் மானிப்பு) உரிமை' அல்லது 'சுயநிர்ணய உரிமை'.

சுயநிர்ணய உரிமை இல்லாத ஒரு தேசிய இனம் உதிரியான உரிமைகளைப் பெற்று இருந்தாலும், அது ஓர் அடிமைப்பட்ட இனமே.

இந்தியாவில் இன்று 18-க்கும் குறையாத தேசிய இனங்கள் இருக்கின்றன. ஜோசப் வி. ஸ்டாலின் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

> *இன்று இந்தியா ஒரே முழுமை என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்தியாவில் ஒரு புரட்சிகர எழுச்சி ஏற்படும்போது, தனக் கென்று தனிப்பட்ட மொழிகளையும், கலாச் சாரங்களையும் கொண்டவையும், இதுவரை அறியப்படாத பல தேசியஇனங்கள் அரங்கில் தோன்றும் என்பதில் ஐயமில்லை"*

நாம் ஒரு தேசிய இனம் என்று எந்த தேசிய இனமும் உணராத அளவிற்கு, மிக இலாவகமாக பிழைப்புவாத அரசியலை பல்வேறு தேசிய இனத் தலைவர்களும் கையாண்டு வருகிறார்கள்.

எட்டு கோடி மக்களைக் கொண்ட தமிழகத் தமிழினம் தன் தாயக நிலப்பரப்பையும், பொதுமொழியையும், ஒரு பொருளியல் வாழ்வில் விளைந்த பண்பாட்டையும், தாம் ஓர் இனம் என்ற உளவியலையும் கொண்டிருப்பதால் இது ஒரு தேசிய இனம்.

தமிழ்த் தேசிய இனம் முதலில் கைக்கொள்ள வேண்டியது தன்னுடைய இறையாண்மை மீட்டெடுப்பு அரசியலைத்தான். சுயநிர்ணய உரிமைக்கான போராட் டங்களை தமிழ்த் தேசிய இனம் முன்னெடுக்க வேண்டும்.

இது இந்தியாவில் உள்ள ஒடுக்கப்படும் அத்தனை தேசிய இனங்களுக்கும் பொருந்தும். பிற நாடுகளில் தலைவர்கள் தேசிய இனப் பிரச்சனையை எப்படிக் கையாண்டார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

மார்க்சு, ஏங்கல்சு, இலெனின், ஸ்டாலின் உள்ளிட்டோர் அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு என்பதை முதலில் அங்கீகரித்தார்கள்.

ஒரு தேசிய இனத்தின் பெரும் ஜனநாயக உரிமையான சுயநிர்ணய உரிமையைக் கைக்கொண்ட ஒரு தேசியஇனம் பிரிந்து போகலாம், அல்லது பிற தேசிய இனங்களோடு சேர்ந்தும் வாழலாம். அதைத் தீர்மானிக்கும் இறை யாண்மையை அந்த இனமே பெற்றிருக்கிறது.

இந்தியா ஒரு பல்தேசிய இன நாடு. இங்கு ஒடுக்கும் தேசிய இனமாக இந்தி தேசிய இனம் இருக்கிறது.

இந்தி தேசிய இனத்தில் ஏழை, எளியவர்கள், பாட்டாளிகள் உண்டு.

ஆனால், ஒடுக்கும் தேசிய இனத்தில் உள்ள ஆளும் வர்க்கமே ஒடுக்குதலைச் செய்கிறது.

அனைத்துத் தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமை அல்லது தன் தீர்மானிப்பு உரிமை பற்றிய புரிதலைப் பெற வேண்டும்.

இந்தியப் பெருநாட்டில்,ஒவ்வொரு தேசிய இனமும் தனக்கான சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான போராடங்களைத் தொடங்க வேண்டும்.

தன் இறையாண்மையை மீட்டெடுக்கப் போராடும் அதேநேரம், பிற தேசிய இனங்களின் போராட்டங்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும்.

இதற்கு நீண்டகாலம் பிடிக்கலாம். ஆனால், தேசிய இனங்களுடையப் பிரச்சினைகளுக்குத் தீர்வு அதில்தான் இருக்கிறது.

**விடுதலை பெற்ற தேசிய இனக் குடியரசுகளின் கூட் டமைப்பாக இந்தியா மாறவேண்டும்!** ●

# மா.பெ.பொ.க சார்பில் எழுச்சியோடு நடைபெற்ற

# சிந்தனையாளன் பொங்கல் மலர் 2021 வெளியீடு

# சுயமரியாதை சமதர்ம மாநாடு

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, மற்றும் 'சிந்தனையாளன்' திங்களிதழின் சார்பில் சனவரி முதல் அல்லது இரண்டாவது கிழமையில் ஆண்டுதோறும் நடைபெறும் பொங்கல் மலர் வெளியீடும் மாநாடுகளும் இந்த ஆண்டு 10.01.2021-இல் நடத்துவது என 11.10.2020 அன்று சென்னை, அம்பத்தூரில் நடைபெற்ற மாபெபொக பொதுக்குழுவில் முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

தோழர் வே. ஆனைமுத்து நவம்பர் 2020 இறுதி முதலே உடல்நலம் குன்றியிருந்ததால், தலைமைக்குழு கூடி மேற்கண்ட விழாக்களை 31.01. 2021-இல், நடத்துவது என மாற்றம் செய்யப்பட்டு எல்லா மாவட்டச் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டது.

அறிஞர் பெருமக்கள் சிறப்பான கட்டுரைகளை வழங்கினர். மாபெபொக தோழர்கள் கொரோனா தொற்றுக் கும் அஞ்சாமல் ஊக்கமாகப் பணியாற்றி வழக்கம்போல் மலருக்கான விளம்பரங்களையும் மாநாட்டு நன்கொடை களையும் திரட்டினர். மலர் உருவாக்கப் பணிகளை வாலாசா வல்லவன், முனைவர் முத்தமிழ், சா. குப்பன், மரு. எ. செம்மலர் ஆகியோர் முனைப்பாகச் செய்துவந்தனர். மலர் வெளியீடு - மாநாட்டுக் குழுவினர் திட்டமிட்டபடி 30.01.2021 அன்று இரவே பொங்கல் மலர் 400 படிகள் வெளியீட்டுக்கு அணியமாகியிருந்தது.

உடல் நலிவுற்றுச் சிகிச்சைக்குப் பின் புதுச்சேரியில் மகன் வீடில் தங்கியிருந்த பொதுச்செயலாளர் வே. ஆனை முத்து, 30.01.2021 அன்றே தாம்பரத்திலுள்ள மூத்த மகன் ஆனை. பன்னீர்செல்வம் வீட்டிற்குத் திரும்பியதோடு மாநாட்டு வேலைகள், இயற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து விளக்கமாகக் கேட்டறிந்தார்.

சென்னை சேப்பாக்கம், திருவல்லிக்கேணி பகுதிகளில் நிறைந்திருந்த வண்ணச் சுவரொட்டிகள் பொதுமக்களை ஈர்த்தன. துணைப் பொதுச்செயலாளர் தி.துரைசித்தார்த்தன், வடக்குமாங்குடி பா. மோகன், கு. தொல்காப்பியன், மீ. தில்லி பாபு, சு. முருகவேள், ஆகியோர் 31.01.2021 ஞாயிறு காலையே மாநாட்டு அரங்குக்குச் செல்லும் சாலையைக் கொடிகளாலும் தோரணங்களாலும் பதாகைகளாலும் விழாக்கோலம் பூண்டிட வைத்தனர்.

பிற்பகல் 2.30 மணிக்கே மாநாட்டு அரங்கிற்கு வருகை தந்துவிட்ட பொதுச்செயலாளர் மாநாட்டு ஏற்பாடுகளைக் கண்டு மகிழ்ந்தார். சரியாக 3.15 மணிக்கு 'சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2021'வெளியீடு, தலைமைக்குழு உறுப் பினர் சா.குப்பன் தலைமையில் தொடங்கியது. மாபெபொக தோழர்கள் சி. நடராசன், பா.வை. அருண்மொழி, முத்து. அன்பழகன், க. குப்புசாமி ஆகியோர் முன்னிலை வகித் தனர். ஆவடி க. நாகராசன் வரவேற்புரை நிகழ்த்திட, 'தலித் முரசு' ஆசிரியர் புனித பாண்டியன் பொங்கல் மலரை வெளியிட்டுச் சிறப்புரை யாற்றினார்.

மா.பெ.பொ.க தோழர்கள் ஆ.கு. ஆறுமுகம், மோ.சி சங்கர், சி. நடராசன், பொ. சுப்பிரமணியன், மா. முருகேசன், பா. வெங்க டேசன், தி.ச.குணசேகரன், குறளமிழ்தன், மு.செயப்பிரகாசு, சீனு. சந்திரசேகரன், தமிழ்க்களம் இளவரசன், ப. வடிவேலு, புலவர் அ. சகாதேவன், மீ. தில்லிபாபு, தாம்பரம் மா. சுப்பிர மணி, செ.ஆனையப்பன், இரா.இரமணன், சூலூர் பாவேந்தர் பேரவைத் தோழர்கள் உள்ளிட்டோர் பொங்கல் மலரைப் பெற்றுக்கொண்டனர். தோழர்கள் துரை. கலையரசு, கோ. கோதண்டராமன், பா. மோகன் வாழ்த்துரை வழங்கிட, மரு. எ. செம்மலர் நன்றியுரை நவில 4.30 மணிக்கு பொங்கல் மலர் வெளியீடு நிறைவுற்றது.

செவிக்கு உணவில்லாதபோது சிறிது வயிற்றுக்குமாய்த் தோழர்கள் அனைவருக்கும் அணிச்சலும் (Cake), மாச்சிலும் (Biscuit), காரமும், தேநீரும் வழங்கப்பட்டன.

மாலை 4.45 மணிக்கு இரண்டாம் அமர்வாகத் தொடங்கிய, சுயமரியாதை சமதர்ம மாநாட்டுக்குப் பொதுச்செயலாளர் வே. ஆனைமுத்து தலைமையேற்றார். முனைவர் முத்தமிழ் ஒருங்கிணைத்தார். தோழர் நா. மதனகவி வரவேற்புரை யாற்றியதைத் தொடர்ந்து, மறைந்த தோழர்களுக்கு செவ் வணக்கத் தீர்மானம் நிறைவேற்றி வீரவணக்க அஞ்சலி செலுத்தப்பட்டது.

'கல்வி உள்ளிட்ட மாநில உரிமைகளை மீட்டெடுத்தல்' தீர்மனத்தை வலியுறுத்தி சி. பெரியசாமியும், வருணாசிரம ஒழிப்புத் தீர்மானம் மீது மு. பாலகுருசாமியும், இடஒதுக்கீடு பாதுகாப்பு தீர்மானத்தை வலியுறுத்தி முனைவர் சி.இரா. இளங்கோவனும், சாதிவெறி ஆணவப் படுகொலைகள் கண்டனத் தீர்மானத்தின் மீது இரா.திருநாவுக்கரசும், வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெறக் கோரி தி. துரை சித்தார்த்தனும், அடக்குமுறைச் சட்டங்களையும் வழக்கு களையும் நீக்கக் கோரும் தீர்மானத்தை வலியுறுத்தி முனைவர் முத்தமிழும் கருத்துரையாற்றினர்.

அதன்பிறகு, சுயமரியாதை - சமதர்மம் பற்றியும், இன்றைய சிக்கல்களுக்குத் தந்தை பெரியார் அன்றே வழங்கிய தீர்வுகளை விளக்கியும், பெரியார் ஈ.வெ.ரா.வின் சிந்தனைகளை நிலைக்கவைக்க தோழர் வே. ஆனை முத்து ஆற்றியுள்ள பணிகளை நினைவுகூர்ந்தும் விரிவான மாநாட்டுச் சிறப்புரையாற்றினார், தமிழ்மண் தன்னுரிமை இயக்க நெறியாளர் பேரா. த. செயராமன். நிறைவாக தோழர் வே. ஆனைமுத்து எனக்கு ஊக்கமும் நம்பிக்கையுமளித்த எல்லோருக்கும் நன்றிசொல்லி நிறைவுரையாற்றிய பின், தோழர் மீ. தில்லிபாபு நன்றி கூறலோடு இரவு 8.00 மணிக்கு மாநாடு நிறைவுற்றது.



தோழர் சா. குப்பன் பொங்கல் மலர் வெளியீட்டுத் தலைமை



தோழர் ஆவடி க. நாகராசன் பொங்கல் மலர் பெறுகிறார்



தோழர் செ. ஆனையப்பன் பொங்கல் மலர் பெறுகிறார்



தோழர் குறளமிழ்தன் பொங்கல் மலர் பெறுகிறார்



புலவர் அ. சகாதேவன் பொங்கல் மலர் பெறுகிறார்



தோழர் மீ. தில்லிபாபு பொங்கல் மலர் பெறுகிறார்



தோழர் ந. வேலு பொங்கல் மலர் பெறுகிறார்



தோழர் ப. வடிவேலு பொங்கல் மலர் பெறுகிறார்




தோழர் தாம்பரம் மா. சுப்பிரமணி பொங்கல் மலர் வெளியீட்டுத் தலைமை




தோழர் தீ. கோபாலகிருட்டிணன் பொங்கல் மலர் பெறுகிறார்




தோழர் கு. தொல்காப்பியன் பொங்கல் மலர் பெறுகிறார்




தோழர் இரா. இரமணன் பொங்கல் மலர் பெறுகிறார்



தோழர் துரை. கலையரசு மலர் வெளியீட்டில் வாழ்த்துரை



தோழர் பா. மோகன் பொங்கல் மலர் வெளியீட்டில் வாழ்த்துரை



தோழர் கோ. கோதண்டராமன் மலர் வெளியீட்டில் வாழ்த்துரை



மரு. எ. செம்மலர் பொங்கல் மலர் வெளியீட்டில் நன்றியுரை



தோழர் நா. மதனகவி சுயமரியாதை சமதர்ம மாநாட்டு வரவேற்புரை



முனைவர் முத்தமிழ் சுயமரியாதை சமதர்ம மாநாட்டு உரை




தோழர் சி.பெரியசாமி சுயமரியாதை சமதர்ம மாநாட்டு உரை



தோழர் தி.துரைசித்தார்த்தன் சுயமரியாதை சமதர்ம மாநாட்டு உரை



முனைவர் சி.இரா.இளங்கோவன் மாநாட்டு உரை



தோழர் மு. பாலகுருசாமி சுயமரியாதை சமதர்ம மாநாட்டு உரை



தோழர் இரா. திருநாவுக்கரசு சுயமரியாதை சமதர்ம மாநாட்டு உரை



தோழர் பொ.சுப்பிரமணியன் மாநாட்டுத் தீர்மானம் முன்மொழிதல்

## சுயமரியாதை சமதர்ம மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### தீர்மானம் - 1 : செவ்வணக்கம்

2020ஆம் ஆண்டு இருபத்தோராம் நூற்றாண்டின் இருண்ட ஆண்டாக அமைந்துவிட்டது. கொரோனா எனும் பெருந்தொற்று மனித உயிர்களை அகவை வேறுபாடின்றி இலக்கக் கணக்கில் கொத்துக்கொத்தாகக் காவு வாங்கிவிட்டது. இக்கொடுந்தொற்றால் மாண்டுபோன மக்கள் அனைவருக்கும்; இக்கொடுந்தொற்றுக் காலத்திலும் உயிரைத் துச்சமெனக் கருதி இந்திய மக்களுக்கே எதிரான மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறக் கோரி நாடுமுழுவதும் நடைபெற்று வரும் இந்திய அரசுக்கும் உழைக்கும் மக்களுக்குமான அறப்போரில் களப்பலியாகி யுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட உழவர் பெருமக்களுக்கும்;

24.12.2020இல் மறைவுற்ற, பெரியார் ஈ.வெ.ரா-வைத் தமிழ்ச் சமூகத்திற்கு எதிர்நிலையில் நிறுத்த முயலும் கூட்டத்தை இடித்துரைத்து, தமிழ்த்தேச அரசியலுக்குத் திராவிடர் இயக்கத்தின் பங்களிப்புகளை நேர்மையோடு திறனாய்வு செய்வதிலும், பெரியார் ஈ.வெ.ரா-வின் சிந்தனைகள் எப்படித் தமிழுக்கும் தமிழருக்கும் அரண் சேர்ப்பவை என்பதையும் நடுவுநிலைமையோடு ஆய்ந்தளித்துப் பெரும்பங்காற்றிய சீரிய சிந்தனையாளர், தமிழ்ப் பண்பாட்டுக் காவலர் பேராசிரியர் தொ. பரமசிவன் அவர்களுக்கும்;

23.11.2020இல் நம்மைவிட்டுப் பிரிந்த, 90 அகவையிலும் மாபெபொகவுக்கும் தோழர் வே.ஆனைமுத்துவின் பணிகளுக்கும் தோன்றாத் துணையாகவும் பெரம்பலூர் மாவட்டச் செயலாளராகவும் களப்பணியாற்றிய கொள்கைக் குன்றம் வரகூர் மா. நாராயணசாமி அவர்களுக்கும்;

02.01.2021இல் மறைவுற்ற, மார்க்சிய - பெரியாரிய - அம்பேத்கரியச் சிந்தனைகளை தம் கவித்துவத்தால் எளிய மக்களுக்கும் எடுத்துச்சென்ற கவிஞர் இளவேனில் அவர்களுக்கும்; 03.12.2020இல் மறைவுற்ற, தமிழ்நாட்டில் - குறிப்பாகத் தென் மாவட்டங்களில் செயலாற்றும் மக்கள் போராளிகளுக்கு அரணாக இருந்து அரச வன்முறைகளிலிருந்தும் காவல்துறை அத்துமீறல்களிலிருந்தும் காத்து வந்த மக்கள் வழக்குரைஞர் செம்மணி அவர்களுக்கும்; 08.01.2021இல் மறைவுற்ற, பெரியார் பெருந்தொண்டர் வடக்கு மாங்குடி அ.பாலகிருட்டிணன் அவர்களின் துணைவியாரும், மாபெபொக கடலூர் மாவட்டச் செயலாளர் பா. மோகனின் தாயாருமான கனகு அம்மையார் அவர்களுக்கும்; மற்றும் மக்கள் தொண்டாற்றி, 2020ஆம் ஆண்டில் மறைவுற்ற அத்துனைப் பெருமக்களுக்கும் இம்மாநாடு செவ்வணக்கம் செலுத்தி ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறது.

### தீர்மானம் - 2 :
### சுயமரியாதை சமதர்மத்துக்கு எதிரான வருணாசிரம ஒழிப்பு

ஈராயிரம் ஆண்டுகளாக இந்திய மக்களைப் பீடித்துக் கொண்ட ஆரியப் பார்ப்பனியம் வருணாசிரமத்தைப் புகுத்தி, 97 விழுக்காடு மக்களான உழைக்கும் மக்களை மான உணர்ச்சியற்றவர்களாக மாற்றி வைத்துவிட்டது. மனுநீதியும் வேத புராண இதிகாசங்களையும் காட்டி வெகுமக்களைச் சூத்திரப் பஞ்சமப் பட்டம் கட்டி இழிமக்களாக ஆக்கிவைத்ததோடு, காலந்தோறும் அரசதிகாரத்தில் உள்ளவர்களைக் கைக்கொண்டு தாங்கள் கொள்கையே ஆட்சிமுறையாக அமைத்துக்கொண்டது.

வெள்ளையன் வெளியேறிய பிறகான இந்தியாவிலும் தனக்குச் சாதகமாக இந்திய அரசமைப்புச் சட்டத்தையே எழுதிக்கொண்டது. இச்சட்டத்தின் பிரிவுகள் 13, 19, 25, 26, 372(3) ஆகியவைதான் வருணாசிரமத்தைப் பாதுகாக்கின்றன. அதனால்தான், தந்தை பெரியார் 1957இல் பிரிவு 372(3)-ஐக் கொளுத்தும் போராட்டத்தை அறிவித்துக் கொளுத்தினார். 3000 தோழர்களுக்குமேல் இச்சட்டப் பிரிவைக் கொளுத்தி சிறையேகினர். 2021-இலும் இச்சட்டங்கள் நீடிப்பது வெகுமக்களை சட்டத்தின்பேரால் இழிமக்களாக வைத்திருப்பதாகும். இவற்றை ஒழிப்பதற்கு மக்கள் மான உணர்ச்சி பெற வேண்டும்; மான உணர்வு பெறவேண்டும் எனில் அதற் கான கல்வியும் சிந்தனையும் வேண்டும்; இதற்குப் பொதுஉரிமை வேட்கை வேண்டும்; மக்கள் மான உணர்வு பெற்று, கல்வியறிவோடு சிந்திக்கத் தொடங்கி தனக்கான உரிமைகளை வென்றபிறகுதான் உடைமைகளில் சமத்துவம் பெறவேண்டும் என்கிற எண்ணமும் களமும் அமையும். அப்போது, மக்கள் வாழ்வில் சமதர்மம் தழைக்கும். இதனால்தான், தந்தை பெரியார், முதலில் தன்மான இயக்கம் கண்டார்.

தந்தை பெரியாரின், புரட்சியாளரின் அம்பேத்கரின் பேரால் கண்டுள்ள இயக்கங்களும் பொதுவுடைமைச் சிந்தனையாளர்களும் ஒன்றிணைந்து இந்தியாவில் வருணாசிரம ஒழிப்பில் களம் காணவேண்டும். இதற்கான ஒரு கூட்டமைப்பாக ‘பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு’ தோன்றிச் செயலாற்றி வருவதையும் இம்மாநாடு வரவேற்றுப் பாராட்டுகிறது. அது இன்னும் தன்னை அமைப்பிலும் வேலைத்திட்டங்களிலும் விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என இம்மாநாடு வேண்டுகிறது.

### தீர்மானம் - 3 :
### வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறுக!

பார்ப்பனப் பனியா மார்வாடிக் கும்பலுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இந்தியப் பண முதலைகளுக்கும் படியளப்பதற்காகவே ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள பாசிச வெறிபிடித்த பாஜக அரசு, கொரோனா பெருந்தொற்றுக் காலத்தைப் பயன்படுத்தி 30-க்கும் மேற்பட்ட வெகுமக்களுக்கு எதிரான சட்ட வரைவுகளை நிறைவேற்றிக்கொண்டது. அவற்றுள் மிகக் கொடுமையானவை, ‘வேளாண் விளைபொருள் வணிக ஊக்குவிப்பு அவசரச் சட்டம் -2020’, ‘உழவர்களுக்கு விலை உறுதி மற்றும் வேளாண் சேவைகள் (உரிமை மற்றும் பாதுகாப்பு) அவசரச் சட்டம் -2020’, ‘அடிப்படைத் தேவைக்கானப் பொருள்கள் (திருத்தம்) அவசரச் சட்டம் - 2020’ மற்றும் ‘மின்சாரச் சட்டத் திருத்தவரைவு 2020’ ஆகியவை.

வேளாண் மக்களின் உரிமையையும் நில உடைமைகளையும் பறித்து உழைக்கும் மக்களை ஏதிலிகளாக ஆக்கிடும் இக் கொடுஞ்சட்டங்களைத் திரும்பப் பெறக் கோரி நாடுமுழுவதும் போராட்டங்கள் தொடர்ந்த நிலையில், தில்லியில் கூடிய உழவர் பெருமக்கள் கடந்த 70 நாள்களாகப் போராடிவருகின்றனர். ஒற்றை அதிகார வெறிபிடித்த பாசக அரசு, கடுங்குளிரில் போராடிவரும் உழவர்கள் 100-க்கும் மேற்பட்டோர் களப்பலி ஆன பிறகும் இருமாப்போடு இறங்கிவர மறுக்கிறது. அறவழியிலான உழவர் போராட்டங்களுக்கு மதச் சாயமும், மாவோவிய - நக்சல் இயக்கச்

சாயமும் பூசி துணை இராணுவத்தைக்கொண்டு அடக்கு முறைகளை ஏவி ஒடுக்க எத்தணித்துவிட்டது. இந்திய அரசின் இந்த ஆணவப்போக்கை இம் மாநாடு வன்மை யாகக் கண்டிப்பதோடு, வெகுமக்களுக்கு எதிரான இச் சட்டங்களை உடனடியாகத் திரும்பப்பெற வேண்டுமென இம் மாநாடு கோருகிறது.

### தீர்மானம் - 4 :
### உபா உள்ளிட்ட அடக்குமுறைச் சட்டங்களை நீக்கு!

மக்களாட்சி முறையில் சட்டங்களும் திட்டங்களும் வெகுமக்களாக இருக்கிற உழைக்கும் மக்கள் நலன் கருதியே அமையவேண்டும். ஆளும் அரசுகளின் போக்குகள் இதற்கு எதிர் நிலையில் செயல்படும்போது அவற்றை எதிர்த்து மக்கள் ஒன்றுகூடுவதும், கருத்து களைத் தெரிவிப்பதும், போராட்டங்கள் நடத்துவதும் சனநாயக நடவடிக்கைகள் என்பதை இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் ஏற்கிறது. மக்கள் தங்கள் கருத்து களை ஒன்றுதிரண்டு சொல்லும் உரிமைகளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சாசனங்கள் ‘அடிப்படை மனித உரிமைகள்’ என வலியுறுத்துகின்றன. மக்கள் திரள் போராட்டங்களின் வழி பல சட்டங்கள் திருத்தி எழுதப்பட் டுள்ளன. தூத்துக்குடி சுடர்லைட் போன்ற பல திட்டங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இப் போராட்டங்களின் உள்ள கோரிக்கைகளை நீதிமன்றங்கள் வழியாக ஏற்ற அரசுகள், அதற்குப் போராடியவர்கள்மீது எண்ணற்ற வழக்குகளையும், ‘உபா’(UAPA) போன்ற புதியபுதிய அடக்குமுறைச் சட்டங் களையும் ஏவி, கருத்துரிமையின் குரல்வளையை நெறிக் கிறது. மனித உரிமைகளுக்கு எதிரான ‘உபா’ உள்ளிட்ட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் திரும்பப் பெறுவதோடு, சனநாயக வழியிலான மக்கள் போராளிகள் மீது போடப்பட்டுள்ள எல்லா வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டுமென இம்மாநாடு இந்திய ஒன்றிய அரசை யும் மாநில அரசுகளையும் கேட்டுக்கொள்கிறது.

### தீர்மானம் - 5 : இடஒதுக்கீடு

இந்திய மக்கள் தொகையில் வெகுமக்களாக இருக்கிற பிற்படுத்தப்பட்ட, பட்டியல் மற்றும் பழங்குடியின மக்கள் கடந்த 20 ஆண்டுகளாகத்தான் ஓரளவுக்கு கல்வியிலும் வேலையிலும் வாய்ப்புப் பெற்று வருகிறார்கள். அதன் சுவை இன்னது என்று அறியும் முன்னதாகவே, பார்ப் பனிய - மேல்சாதிய வெறிபிடித்த பாசக ஆட்சிக்கு வந்த நாள் முதல் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டை ஒழித்துக்கட்ட எல்லாம் செய்துவருகிறது. அதேநேரத்தில் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக உயர்சாதி மக்களுக்கு 10% இடஒதுக்கீடு அளித்துள்ளது. இதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. உடனடியாக சாதி வாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தி, கல்வி, வேலை, தொழில் உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் நூறு விழுக்காடு இடங்களையும் மக்கள்தொகை அடிப்படை யில் பங்கிட்டுத் தரவேண்டும் என இம்மாநாடு கோருகிறது.

### தீர்மானம் - 6 : மாநில உரிமைகள்

விடுதலைபெற்றதாகச் சொல்லப்படும் இந்தியாவில் அதன் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் கடந்த 70 ஆண்டுகளில், மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி உள்ளிட்ட பல சட்டங்களை, இறுதி முடிவு எடுக்கும்போது மாநில அரசுகளுக்கு எந்த உரிமையும் இல்லாத பொதுப்பட்டியலுக்கு மாற்றிக்கொண்டது, இந்திய ஒன்றிய அரசு.

இன்றைக்கு ஆட்சியில் உள்ள பாசக, ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே வரி, ஒரே பண்பாடு என எல்லாவற்றிலும் ஒற்றைத் தன்மையைத் திணித்து மொழித்தேச மாநிலங் களின் தனித்த விழுமியங்களைச் சிதைத்து வருகிறது. இதற்காகத்தான் ‘நீட்’ போன்ற தேசிய நுழைவுத்தேர்வுகள், தேசியத் தேர்வு முகமை, தேசிய உயர் கல்வி ஆணையம் என எல்லாவற்றையும் இந்தியா முழுமைக்கும் ‘ஒன்றே’ என்று கொண்டுவருகிறது. இப்போக்கு மொழித்தேசங் களுக்கும், அதன் உரிமைகளுக்கும், ஆதாரங்களுக்கும், விழுமியங்களுக்கும், தாய்மொழி வழிக் கல்விக்கும் முன் எப்போதையும்விட பேராபத்தாகும். இப்படி வல்லடியாக மாநில உரிமைகளைப் பறித்துவரும் இந்திய ஒன்றிய அரசை வன்மையாகக் கண்டிப்பதோடு, மொழி மாநில எல்லைக் குட்டபட்ட கல்வி, வேலை, தொழில் எல்லாவற்றிலும் ஒன்றிய அரசானாலும், மாநில அரசானாலும் அந்தந்த மாநில மக்களுக்கே 90% அளிக்கும்படி சட்டத்திருத்தம் செய்திடவேண்டும் என இம் மாநாடு கோருகிறது.

மேலும், இந்திய ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக 8ஆவது அட்டவணையில் உள்ள எல்லா மொழிகளையும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இந்திய ஒன்றிய அரசை இம் மாநாடு கோருகிறது.

நிற்க. கல்வி உள்ளிட்ட இழந்த எல்லா உரிமைகளையும் மொழித் தேசங்கள் திரும்பப் பெறுவதோடு, வலுவான அதிகாரங்களைக் கொண்ட மொழித் தேசங்கள் ஒருங் கிணைந்த உண்மையான இந்தியக் கூட்டாட்சியை அமைப்பதே இதற்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதால், மார்க்சிய - இலெனினிய, பெரியாரிய - அம்பேத்கரிய, மொழித் தேசியச் சிந்தனையாளர்களும், இயக்கங்களும் இவ்வழியில் சிந்தித்து இந்திய ஒன்றியம் முழுவதும் களம் அமைக்கவேண்டும் என இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

### தீர்மானம் - 7 : சாதிவெறி ஆணவப் படுகொலைகள்


பெரியார் மண் என்று பெருமை பேசுகிற, பெரியாரிய அம்பேத்கரிய இயக்கங்கள் நூற்றுக் கணக்கில் உள்ள தமிழ்நாட்டில் மட்டும் கடந்த ஓராண்டில் 10-க்கும் மேற்பட்ட சாதிவெறிப் படுகொலைகளும், நூற்றுக் கணக்கான தீண்டாமைத் தாக்குதல்களும் நடைபெற் றுள்ளன என்பது தமிழர் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையாகும்.

சாதிவெறிப் படுகொலையை நிகழ்த்தியவரும், படு கொலைக்கு ஆளானவரும்; தீண்டாமை வன் கொடுமை களை நிகழ்த்துபவரும், தீண்டாமைக்கு ஆட்படுபவரும் தமிழரே. தமிழ்நாட்டு அரசு இதுகுறித்துக் கவலையோடு சிந்தித்து உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுப்ப தோடு, சாதி ஒழிப்பு, பெரியாரியம், அம்பேத்கரியம், பொதுவுடைமை, தமிழியம் உள்ளிட்ட மண் சார்ந்த முற்போக்குச் சிந்தனைகளைத் தொடக்கக் கல்வி முதலே பயிற்றுவிக்க வேண்டும் என் இம் மாநாடு தமிழ்நாட்டு அரசைக் கேட்டுக்கொள்கிறது.

- முனைவர் **முத்தமிழ்**

# பிரனாப் முகர்ஜியின் நூல் சுட்டும் உண்மைகளும் மறைக்கப்பட்ட தகவல்களும்

குட்டுவன்




1950-க்குப் பிறகு இந்தியாவில் 17 குடியரசுத் தலைவர்கள் பணியாற்றி உள்ளனர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற பல தலைவர்களும் அறிஞர்களும் இருந்தபோதிலும் ஒன்றிய அரசிற்கு ஒத்துப் போகிறவர்கள்தான் குடியரசுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது உண்மை.

முதல் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்தும், நீலம் சஞ்சீவரெட்டியும் இதற்கு விதிவிலக்காக இருந்தனர்.

நீலம் சஞ்சீவரெட்டி 1969ஆம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரசின் சார்பில் குடியரசுத் தலைவர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1969இல் காங்கிரசில் பிளவு ஏற்பட்டதன் காரணமாக, காங்கிரசின் அதிகாரப்பூர்வ வேட்பாளரான சஞ்சீவ ரெட்டியைத் தோற்கடிக்க எதிர்க்கட்சிகளின் ஆதரவை இந்திரா காந்தி நாடினார். பிளவுபட்ட காங்கிரசின் ஒரு பகுதியினரும் எதிர்க்கட்சியினரும் ஒன்றாக இணைந்து வாக்களித்ததனால் வி.வி.கிரி குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதமர் இந்திரா காந்தியின் ‘ஆமாம் சாமி’யாக சஞ்சீவ ரெட்டி இருக்கமாட்டார் என்பதே அவர் தோற்கடிக்கப்பட்டதற்குக் காரணமாகும்.

இந்தியக் குடியரசுத் தலைவர்களில் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அதிகார எல்லைக்குள் செயல்பட்டு, சிறந்த குடியரசுத் தலைவராக இருந்தவர் திரு. கே.ஆர். நாராயணன். வாஜ்பாய் அரசு சில மாநில அரசுகளைக் கலைப்பதற்குக் குயடிரசுத் தலைவரிடம் ஒப்புதலைக் கேட்டபோது அந்தக் கோப்பினை மறு பரிசீலனைக்கு உட்படுத்த ஒன்றிய அரசுக்கே திருப்பி அனுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர்களின் கடிதங்களைக் கமுக்கமாகக் காவல் துறையினர் கண்காணிக்கும் வாய்ப்பை அளித்த அஞ்சல் சட்டத்தை அன்றையக் குடியரசுத் தலைவர் ஜெயில் சிங் ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டார்.

குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கடராமனும், பிரணாப் முகர்ஜியும் காங்கிரசாலும் காங்கிரசுக் கூட்டணிக் கட்சிகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆனால், இருவரும் ஓய்வுபெற்ற பிறகு பாஜக பக்கம் சாய்ந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக மறைந்த பிரணாப் முகர்ஜி நாக்பூர் ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்துக்கே சென்று விழாவில் பங்கேற்றது பலருக்கு அதிர்வலைகளை ஏற்படுத்தியது. நாக்பூர் சென்ற பிறகுதான் பிரணாப் முகர்ஜிக்கு ‘பாரத ரத்னா’ வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரணாப் முகர்ஜி தொடர்ந்து சந்தர்ப்பவாத அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பதவி வேட்டையாடுவதில் வல்லவர்.

1966இல், மேற்கு வங்கத்தில், காங்கிரசிலிருந்து பிரிந்து ‘வங்கக் காங்கிரசு’ என்ற ஒரு மாநிலக் கட்சியைத் தொடங்கியவர்களில் பிரணாப் முகர்ஜி முதன்மையானவர். இக் கட்சியின் சார்பில் 1970இல் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் தமிழக முதல்வர் கலைஞர், பஞ்சாப் முதல்வர் குர்நாம் சிங் ஆகியோருடன் கலந்துகொண்டு மாநில உரிமைகளுக்காக முழக்கமிட்டவர்தான் பிரணாப் முகர்ஜி.

இந்திரா காந்தியின் மறைவிற்குப் பிறகு தன்னை பிரதமராக காங்கிரசு முன்மொழிய வேண்டும் என உள்குத்து வேலைகளைச் செய்து அவை பலிக்காமல் போகவே 1986இல் ‘தேசிய சோசலிச காங்கிரசு’ என்ற கட்சியைத் தொடங்கி 1989 வரை நடத்தினார்.

இராஜிவ் காந்தி பிரதமராக இருந்த நேரத்தில் பிராணப் முகர்ஜியை ஒதுக்கியே வைத்திருந்தார். இராஜிவ் மறைவுக்குப் பிறகு 1991இல் ஒன்றிய அரசின் திட்டக் குழுவின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

2004இல் சோனியா காந்தி தலைமையில் காங்கிரசு வெற்றிபெற்றபோது, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் அமைந்தது. இதில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தார். பின்பு இதே அமைச்சரவையில் நிதியமைச்சராகப் பணியாற்றினார்.

இவ்வாறு பல கட்சிகள் அமைத்து பல அமைச்சரவையில் இடம்பெற்ற இவருக்குப் பிரதமராகும் கனவு மட்டும் பலிக்கவில்லை. இருமுறை மன்மோகன் சிங் பிரதமராக பொறுப்பேற்றதையும் இவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

பிராணப் முகர்ஜியின் மறைவிற்குப் பிறகு, 2021இல் அவர் எழுதிய ‘குடியரசுத் தலைவரின் ஆண்டுகள் 2012–2017’ (The Presidential Years 2012-2017) என்ற நூல் வெளிவந்துள்ளது.

1967-க்குப் பிறகு உருவான தமிழ் அரசியலும் திராவிடக் கட்சிகளுடைய ஆட்சிகளும்தான் இந்தியா

இலங்கை உறவில் செல்வாக்கைச் செலுத்தின. பொதுவான இன பண்பாட்டு உறவினைக் கொண்டிருந்த தமிழ்நாடும், வட பகுதியில் இருந்த இலங்கையும் தமிழீழக் கொள்கை வலிமை பெறுவதற்குப் பொதுவான காரணங்களாக அமைந்தன.

ஆனால், இந்நூலில் இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் இலங்கைப் பிரச்சனையில் இந்தியா காட்டிய அக்கறை - குறிப்பாக, பிரதமர் இந்திரா காந்தி ஈழப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முற்பட்ட நடவடிக்கைகள் முழுமையாக மறைக்கப்பட்டுள்ளன.

> *"அதிமுகவும், திமுகவும் மற்றும் சிறிய கட்சிகளும் தமிழக மக்களினுடைய ஆதரவைப் பெறுவதற்காகவே இப்பிரச்சனையை ஆதரித்தார்கள்"*

எனக் குறிப்பிடுகிறார்.

> *"1995ஆம் ஆண்டு, நான் வெளியுறவுத் துறை அமைச்சராக நரசிம்மராவ் அமைச்சரவையில் இடம்பெற்றபோது பிரபாகரனை இந்தியாவிற்கு நாடுகடத்த வேண்டும் என்ற கோரிக்கையைக் குடியரசுத் தலைவர் குமாரதுங்காவிடம் வலியுறுத்தினேன்"*

எனக் குறிப்பிடுகிறார்.

பிரபாகரனை ஒரு விடுதலை வீரனாகச் சித்தரிப்பதற்குப் பதிலாக அவர்களைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிடுகிறார். 2010இல் இந்தியாவின் முழுமையான ஆதரவை இலங்கைக்கு அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

> *"இராஜிவ் காந்தி - ஜெயவர்தனே இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் வழியாக ஈழத் தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றவேண்டும் என வலியுறுத்தினேன்."*

> *"இராஜபக்சே சீனாவின் பெருமளவிலான உதவிகளைப் பெற்றார். இதை இந்தியா எதிர்த்த போது, 'சீனா இலங்கைக்கு அதிக அளவிற்கு உதவிகள் அளித்த பிறகுதான் இந்தியா எங்களுக்கு உதவ முன்வந்தது' என்று இலங்கை கூறியது."*

என்பதையும் இந்நூலில் பிரணாப் முகர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

> *"இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இரண்டு நாடுகளின் பாதுகாப்பு உட்படப் பல பொருளாதார நலன்கள் சார்ந்துள்ளன என்றும் இராசபக்சேவிடம் குறிப்பிட்டேன்."*

என்கிறார்.

> *"இருப்பினும், சீனாவிலிருந்து அதிக நிதியுதவி இலங்கை பெறுவதைத் தடுப்பதற்காகவும், இந்தியாவின் பாதுகாப்பு கருதியும், அதிக அளவிலான நிதியை நரேந்திர மோடி ஆட்சி அமைந்த பிறகும் இந்தியா அளித்து வருகிறது. அமெரிக்காவினுடைய கடற்படைத் தளம் இந்தப் பகுதியில் அமைவதை எதிர்த்தது போன்று, இந்தியாவினுடைய எல்லையை ஒட்டிய அரபிக்கடல் வங்கக் கடலுக்கிடையே சீனா தனது செல்வாக்கை அதிகரித்து வருவதை எதிர்க்கவேண்டிய நிலை இந்தியாவிற்கு இருந்தது"*

என்றும் குறிப்பிடுகிறார்.

> **"நான்கு தமிழக மீனவர்களை இலங்கை கடற்படைக் கப்பல் தாக்கி அவர்களை உயிரிழக்கச் செய்ததானது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை முழு அளவில் தோல்வியடைந்தது என்பதைச் சுட்டுகிறது."**

இந்திரா காந்தி மறைவிற்குப் பிறகு, இந்தியா ஈழத் தமிழர்களின் நலனில் பெரும் அக்கறை கொள்ளாமல் இந்திய நலன்களையே முன்னிறுத்தியது என்பதை பிராணப் முகர்ஜி ஐயர் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

2014-க்குப் பிறகு மோடி ஆட்சி அமைந்த பிறகு, இராஜபக்சேவிற்கு தில்லியில் இரத்தினக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்ட பிறகும், தொடர்ந்து தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், ஈழத் தமிழர்களின் கோரிக்கைகள் ஒடுக்கப்படுவதும் நடந்துகொண்டே இருக்கிறது என்பதை இந்த நூலில் நன்கு உணர முடிகிறது.

சில நாட்களுக்கு முன்பு, நான்கு தமிழக மீனவர்களை இலங்கை கடற்படைக் கப்பல் தாக்கி அவர்களை உயிரிழக்கச் செய்ததும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை முழு அளவில் தோல்வியடைந்தது என்பதைச் சுட்டுகிறது அல்லவா?

குறிப்பாக, 15 நாட்களுக்கு முன்பு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்குப் பயணம் செய்து, சில கொள்கைகளை வலியுறுத்தினார் எனச் செய்திகள் குறிப்பிட்டன. மறுநாளே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்த - ஈழப்போராட்டத்தில் உயிர்நீத்த தமிழர்களின் நினைவுச் சின்னம் அடித்து நொறுக்கப்பட்டது. தமிழ்நாட்டில் எதிர்ப்பு வரவே, இலங்கைக்கான இந்தியத் தூதரிடம் தொடர்புகொள்ளப்பட்டது எனும் செய்தியும் வந்தது.

இந்த நிகழ்வுகளுக்குப் பிறகுதான் இலங்கைக் கடற்படையின் தாக்குதல் தமிழக மீனவர்கள் மீது நடைபெற்றது. ஈழத் தமிழர்களின், தமிழ்நாட்டுத் தமிழர்களின் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு உணர்வுகள் கேவலப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய தமிழ் இன விரோதப் போக்கில் இராஜிவ் காந்தி, மன்மோகன் சிங் கடைப்பிடித்த அணுகுமுறைகளும், இன்றையப் பிரதமர் மோடி கடைப்பிடிக்கும் அணுகுமுறைகளும் ஒன்றாகவே அமைந்துள்ளன.

உலகத்தில் வாழும் 10 கோடி தமிழர்கள் கேவலப் படுத்தப்படுகிறார்கள். ஆனால், இதே இந்தியா, 32 இலட்சம்

மக்கள் தொகை உள்ள திபெத் பிரச்சனைக்கு ஆதரவாக நின்று சீனாவை எதிர்த்து நிற்கவில்லையா? இன்றளவும் இந்தப் பிரச்சினை தொடர்ந்து வருகிறதே!

**அப்படி என்றால், 32 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட திபெத்துக்கு ஒரு நீதி, உலகமே கண்டிக்கக் கூடிய அளவிற்குத் தமிழ் இனப்படுகொலையைத் திட்டமிட்டு நடத்திய இராசபக்சேவிற்கு ஒரு நீதியா? சீனாவைக் காட்டித் தமிழர்களின் உரிமைகளை மறுப்பதை எத்தனை காலம் தமிழர்கள் பொறுத்துக் கொள்வார்கள்?**

> *“பிரதமர் மோடி, ரூ.500 ரூ.1000 உயர் மதிப்பு பணத் தாள்கள் செல்லாது என அறிவித்தபோது தனது அமைச்சரவையைக் கூட அவர் கலந்து ஆலோசிக்கவில்லை. தொலைக்காட்சி வழி யாகத்தான் நாட்டு மக்கள் அறியவேண்டிய சூழல் ஏற்பட்டது.”*

எனக் குறிப்பிடுகிற பிரணாப் முகர்ஜி, இந்த உரைக்குப் பிறகுதான் மோடி தன்னைச் சந்தித்து பண மதிப்பிழப்பு நடவடிக்கை பற்றி விவரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கறுப்புப் பணத்தையும் ஊழலையும் கட்டுப்படுத்து வதற்காகவும் தீவரவாதிகளுக்குச் செல்லும் பணத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டதாக மோடி தன்னிடம் விளக்கினார் எனக் கூறி யுள்ளார்.

> *“முன்னாள் நிதி அமைச்சர் என்கிற முறையில் என்னுடைய ஆதரவை மோடி வேண்டினார். அதன் அடிப்படையில் பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு ஆதரவாக அறிக்கை வெளி யிட்டேன்.”*

எனவும் கூறியுள்ளார், பிரனாப்.

அதன் பிறகு ‘சரக்கு - சேவை வரி’ பற்றியும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சரக்கு - சேவை வரி அதிக வரி வருவாயை அளித்து அரசிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்க மளிக்கும் எனும் கருத்தையும் இந்நூலில் குறித்துள்ளார்.

பிரணாப் முகர்ஜி குறிப்பிட்டுள்ள மேற்கூறிய கருத்துகள் எவ்வளவு பொய்யானவை என்பதை கொரானா தொற்று நோய்ப்பரவலுக்கு முன்பே தொடங்கிய பொருளாதாரச் சரிவும், என்றுமில்லா அளவிற்கு இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி, வருமானம், சொத்து ஏற்றத் தாழ்வு உருவாகி 70 விழுக்காட்டு மக்களின் வாழ்வியலைச் சிதைத்து வரும் நிலையும் சுட்டும் பல புள்ளிவிவரங்கள் மெய்ப்பிக்கின்றன.

மேலும், தற்போது 2021ஆம் ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியானது சுழியத் திற்குக் கீழே 7.8 விழுக்காடு எதிர்மறை வளர்ச்சியாகச் சென்றுள்ளதால், இந்தியப் பொருளாதாரம் எப்போது வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பும் எனப் பல வல்லுநர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், ‘திட்டமிடப்பட்ட சூறையாடல் - சட்ட ரீதியான கொள்ளை’ (Organised Loot and Legalised Plunder) எனப் பணமதிப்பிழப்பு நடவடிக்கையைக் கடும் சொற்களால் சாடினார் என்பதை பிரணாப் முகர்ஜி தெரிந்தோ தெரியாமலோ வெளிப்படுத்தி உள்ளார். இது தந்தை பெரியார் குறிப்பிட்டதுபோலப் “பார்ப்பனர்கள் எப்போதும் சிறந்த பணியாளர்கள், மோசமான நிர்வாகிகள்” என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

**பதவிக்காகப் பார்ப்பனர்கள் விலை போவார்கள்; என்ன இருந்தாலும் சீக்கியர்கள் தங்களின் வீரத்தை வெளிப் படுத்தாமல் இருக்கமாட்டார்கள் என்பதையே மேற்கூறிய கருத்துகள் உறுதிப்படுத்துகின்றன.**

பிரணாப் முகர்ஜி குடியரசுத் தலைவராகப் பொறுப் பேற்பதற்கு முன்பு கலைஞரை நேரில் சந்தித்து 2012இல் ஆதரவு கேட்டார். தமிழ்நாட்டில், திமுக சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு தனியார் உணவு விடுதியில் கலந்துகொண்ட கூட்டத்தில் எல்லோரையும் கைகூப்பி ‘ஆதரவு தாருங்கள்’ எனக் கேட்டார்.

2005இல் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த பிராணப் முகர்ஜி, அதிகாலை நடைப் பயிற்சியிலிருந்த கலைஞரிடம் தொலைப்பேசியில் தொடர்புகொண்டு, நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறையின் கீழ்ப் பணியாற்றும் தலைமைப் பொறியாளரின் பதவிக் காலத்தை மேலும் நீட்டிக்கும்படி அத்துறையின் அமைச்ச ராக டி.ஆர்.பாலுவிடம் பரிந்துரைக்கும்படிக் கேட்டார். உடனடியாக கலைஞர், டி.ஆர். பாலுவிடம் இதைப் பற்றித் தகவல் பெறுமாறு என்னிடம் கூறினார். நான் வீட்டிற்குச் சென்றபோது சற்றும் எதிர்பாராத வகையில் நண்பர் டி.ஆர்.பாலு என்னைத் தொலைப்பேசியில் அவரே தொடர்புகொண்டார். நான் நடந்த விவரத்தைக் குறிப் பிட்டேன். அப்போது டி.ஆர்.பாலு,

> *“சாலைப் போக்குவரத்துச் சட்டங்களின்படி மாநில அளவில் பணியாற்றும் பொறியாளர்கள் நான்கு ஆண்டுகள் வீதம் இருமுறை மட்டுமே பதவி வகிக்க முடியும். பிரணாப் முகர்ஜியால் பரிந்துரை செய்யப்பட்ட பொறியாளர் பத்து ஆண்டுகளுக்கு மேல் பதவியில் நீடித்திருந்தார். எனவே, உயர் அலுவலர்கள் இந்தச் சட்டத்தைக் கூறி இவருக்குப் பதவி நீட்டிப்பு செய்வதற்கு விதிகளில் வழியில்லை எனக் குறிப்பிட்டனர். அதையே நானும் ஏற்றுக்கொண்டேன்”*

என்ற பதிலை அளித்தார்.

மேலும், அந்தக் குறிப்பிட்ட தலைமைப் பொறியாளர் மீது ஊழல் குற்றச்சாட்டுகளும் நிர்வாக முறைகேடுகளும் உள்ளன என அதிகாரிகள் கோப்புகளைக் காட்டி என்னிடம் தெரிவித்தனர் என டி.ஆர். பாலு என்னிடம் கூறினார்.

மறுநாள் காலை நடைப்பயிற்சியின்போது டி.ஆர். பாலு தெரிவித்த தகவலைக் கலைஞரிடம் தெரிவித்தேன். அதற்குக் கலைஞர் சிரித்துக்கொண்டே பிரணாப் டி.ஆர். பாலு மீது பழியை அல்லவா சுமத்தினார் எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு பல நேரங்களில் கலைஞரிடம் கைகூப்பி உதவி கேட்ட பிரணாப் முகர்ஜி, கலைஞரைப் பற்றி ஒரு வரி மட்டுமே இந்நூலில் குறித்துள்ளார்.

மேலும், 117 புகைப்படங்கள் இந்நூலில் வெளியிடப் பட்டுள்ளன. பிரணாப் முகர்ஜிக்கு அரசியல் வாழ்வளித்த காங்கிரசு முன்னணித் தலைவர்களான காந்தியார், நேரு, இந்திரா காந்தி படங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இவருக்கு அரசியல் புணர் வாழ்வளித்த நரசிம்மராவ் படம் மூடி மறைக்கப்பட்டுள்ளது. பலர் இடம்பெற்ற ஒரு புகைப்படத்தில் சோனியா முகம் மட்டும் தெரிகிறது.

ஆனால், 2012இல் ஜெயலலிதா வீட்டில் நடந்த நிகழ்வு ஒரு வண்ணப் படமாக நூலின் முதல் பகுதியிலேயே வெளியிடப்பட்டுள்ளது. அதுபோன்றே, மோடியின் நிகழ்வு 3 இடங்களில் வண்ணப்படமாக வெளியிடப் பட்டுள்ளது. இனப் படுகொலை செய்த இராசபக்சேவின் வண்ணப்படமும் வெளியிடப்பட்டுள்ளது. திருப்பதி தேவஸ்தானத்தில் பார்ப்பன பூசாரிகள் இவருக்குப் பிரசாதம் கொடுக்கும் படமும் ஜெயலலிதா படத்திற்குக் கீழே வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் புகைப்படங்களே இவர் யார்? என்பதை வெளிச்சம் போட்டு அடையாளம் காட்டுகின்றன.

2004இல் மன்மோகன் சிங் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில்,

> *“பிரணாப் முகர்ஜி கொலைக் குற்றம் சாட்டப் பட்ட காஞ்சி சங்கராச்சாரியைச் சிறைக்கு அனுப்பக்கூடாது. சங்கராச்சாரியாரை அவ மதிப்பது இந்து மதத்தை அவமதிக்கும் செயல். பிரதமர் உடனடியாக இப் பிரச்சினையில் தலை யிடவேண்டும்”*

எனக் கேட்டுக்கொண்டார். இவரின் ஆர்.எஸ்.எஸ். அடையாளம் அப்போதே வெளியே வந்துவிட்டது அல்லவா?


இதேபோன்று ஆர்.வெங்கட்ராமன் எழுதிய ‘குடியரசுத் தலைவராக நான்’ என்ற நூல் 1994இல் வெளி வந்தது.

அந்த நூலிலும் ‘வளர்த்த கடா மார்பில் பாயும்’ என்ற பழமொழிக்கேற்ப காங்கிரசின் தலைவர்களை விமர்சனம் செய்திருந்தார்.

1999ஆம் ஆண்டு வாஜ்பாய் பிரதமரான போது ஒன்றிய அரசின் திட்டக்குழுவில் பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வெங்கடசுப்ர மணியமும் இடம்பெற்றிருந்தார். ஆர்.வெங்கட்ராமன் பரிந்துரையின் பெயரில் வாஜ்பாய் இவரை நியமித்தார்.

இதற்குக் கடுமையான கண்டனத்தை அமைச்சரவை யில் இடம்பெற்றிருந்த முரசொலி மாறன் வாஜ்பாயிடம் நேரில் சந்தித்துத் தெரிவித்தார்.

இதுபோன்ற திராவிட இயக்கப் பரம்பரை எதிரிகளைப் பதவிகளில் நியமித்தால், திமுக அமைச்சரவையில் இருந்து விலகிவிடும் எனக் கூறினார். இதைக் கேட்டு அதிர்ந்த வாஜ்பாய், வெங்கடசுப்ரமணியத்தை பதவி விலகக்




கோரினார். ஆனால், வெங்கடசுப்ரமணியம் பலரிடம் சென்று பரிந்துரைகளைக் கேட்டு பதவியில் நீடித்தார். ஆனால், வாஜ்பாய் அவருக்குத் திட்டக்குழுவின் பணிகளில் எந்த ஒரு துறையையும் ஒதுக்கவில்லை.

இக்கட்டுரையாசிரியர் ஒருமுறை திட்டக்குழுவி னுடைய நூலகத்திற்குச் செல்லும்போது, மின்தூக்கியில் வெங்கடசுப்ரமணியம் பார்த்துவிட்டார். அவரின் அறைக்கு அழைத்துச் சென்று, தான் பதவி இறக்கம் செய்யப்பட்டது குறித்துக் கூறி, கண்ணீர் வடித்தார். கலைஞரிடம் இது தொடர்பாக என்னைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

அப்போது, அவர் ஓர் உண்மையைப் போட்டு உடைத்தார். “குடியரசுத் தலைவராக இருந்தபோதே ஆர்.வெங்கட்ராமன் கண் பார்வை இழந்துவிட்டார். அவர் கூறிய குறிப்பின் அடிப்படையில் அவரது நூலை நான்தான் எழுதினேன். இதற்காகவா இந்தத் தண்டனையை எனக்கு மாறன் அளித்தார்” எனக் கேட்டார்.

இப்போது, பிராணப் முகர்ஜியின் ‘குடியரசுத் தலை வரின் ஆண்டுகள் 2012-2017’ (The Presidential Years 2012-2017) எனும் இந்த நூலைப் படிக்கும்போது இவருக்காக யார் எழுதியிருப்பார்கள்? என்ற ஐயம் இயல்பாக எழுகிறது.

●

# கடவுளின் தற்கொலை!

• ஈரோடு தமிழன்பன்

மர்மமான முறையில்
கடவுள்
செத்துக் கிடப்பதாகத்
தகவல்.

நாத்திகர்கள் நடத்திய
வன்முறையாக இருக்குமோ?
விசாரித்த போது
இல்லாத கடவுளை எப்படி
நாங்கள் கொன்றிருக்க முடியும்?
என்று மறுத்துவிட்டனர்
நாத்திகர்கள்.

அர்ச்சகர்களாகத் தங்களையும்
அமர்த்த வேண்டும் என்று
போராட்டம் நடத்திய கலகக்காரர்கள்
வேலையாக இருக்கலாம்!
காவல் துறையின்
இரகசியக் கண்களில் சந்தேகம்.

தங்களிடமிருந்து கடவுள்
கை நழுவிப் போய்விடக் கூடாது
என்பதற்காகப்
புரோகிதர்களே இந்தப் பாதகத்தைப்
புரிந்திருக்க வேண்டும்!
கலகக்காரர்கள்
விரல்கள் வேறுதிசை காட்டின.

ஆபரணங்கள் உண்டியலை,
ஏன் தன்னையே
கொள்ளை யடிக்க வந்தவர்களிடம்
எதிர்ப்பு காட்டியிருக்கலாம்!
கைகலப்பில்
கடவுள் காலி செய்யப்பட்டிருக்கலாம்!
மோப்பத் துறை
துப்புக்கு அலைந்தது.

பகையான
கடவுள்களின் சதியா?
பத்திரிகைக் கபாலங்களில்
கசிந்தன யூகங்கள்.

மாற்றுக் கடவுள்களின்
அக்கிரமம் ஒழிக!
மாற்றுக் கடவுள்களின்
அராஜகம் ஒழிக!
மாற்றுக் கடவுள்களின்
அட்டூழியங்கள் ஒழிக!

மதங்கள்
கத்தி கடப்பாறைகளோடு
தெருக்களில் இறங்கின!

மக்கள் பிணங்கள்
தெருக்களிலும்
கடவுள் பிணம்
ஆலயத்திலும்
அழுகி நாறின!

கண்களில்
எவருக்கும் படாதபடி
கடவுள்
எழுதிவைத்திருந்த குறிப்பு –

என்னையே எப்போதும்
நம்பியிருக்கும் மக்களை
என்னால்
காப்பாற்ற முடியவில்லையே!
என்னும் சுய சோகத்தில்
தற்கொலை செய்து கொண்டேன்.
என் சாவுக்கு
எவரும் காரணம் இல்லை.



# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

**Marxist Periyarist Communist Party**

277/2, சென்னை - திருவள்ளூர் நெடுஞ்சாலை
அம்பத்தூர், சென்னை - 600 053.
மின்னஞ்சல் : sinthanaiyalantamilmonthly@gmail.com


**வே. ஆனைமுத்து** 02.02.2021
பொதுச்செயலாளர்

பெறுநர்
மாண்புமிகு **க. பழனிச்சாமி**
முதலைமைச்சர், தமிழ்நாடு அரசு
சென்னை.

மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் உயர்திரு எடப்பாடி க பழனிசாமி அவர்களுக்கு வணக்கம்!

ஐ நா. மனித உரிமைகள் ஆணையத்தின் 46-ஆவது அமர்வு வரும் பிப்ரவரி மார்ச் திங்களில் நடைபெற உள்ளது. இந்த அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் கொண்டுவருவதற்கான முன்னெடுப்புகளை, உலகெங்கும் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் செய்துவருகின்றனர்.

அதற்கு வலுசேர்க்கும் வகையில், தமிழீழ மக்களின் நலன் கருதி, 2013ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் தமிழ்நாட்டு சட்டப்பேரவையில், மேனாள் முதலமைச்சர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்கள் முன்மொழிந்து ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தை ஒட்டி, கீழ்க்கண்ட தீர்மானங்களை மீண்டும் ஒருமுறை நிறைவேற்றி, அதனை இந்திய நடுவண் அரசுக்கு அனுப்பி வைத்து, உலக நாடுகளுக்கும் இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுக்குமாறு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி அன்போடு வேண்டுகின்றது.

1). 1987-ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை உடன்படிக்கையின்படி, இலங்கையின் வடக்குப் பகுதியையும் கிழக்குப் பகுதியையும் இணைத்து 'வடகிழக்கு' என்று 'தமிழர்களின் தாயகம்' என்பதை உறுதிசெய்யத் தேவையான நடவடிக்கைகளை இந்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்;

2). இறுதிக்கட்ட ஈழப்போரில் நடைபெற்ற இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனித குலத்திக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை விசாரணை செய்ய, பன்னாட்டுக் குற்றவியல் நீதி மன்றத்துக்குப் பரிந்துரை செய்யவேண்டும்; போர்க்குற்றங்கள் தொடர்பான தடயங்களைப் பாதுகாக்க ஐநாவின் ஏற்பாட்டில் தனி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்;

3). ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு 'தனி ஈழம்' குறித்துப் பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும்;

4). இலங்கைத் தீவில் ஆட்சியில் உள்ள சிங்கள பௌத்தப் பேரினவாத அரசால் தமிழர்களின் நிலங்கள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன; தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களிலும், வளரலாற்று ரீதியான இடங்களிலும் திட்டமிட்டே சிங்களக் குடியேற்றம் நடைபெறுகின்றது. தமிழ் இனத்தை அடையாளம் தெரியாமல் அழித்தொழிக்கும் செயல்கள் தீவிரமாக நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம், உடனடியாக நிறுத்தவேண்டும்; மேலும், தமிழர்களின் தாயகத்தில் குவிக்கப்பட்டுள்ள அனைத்துப் படையினரும் உடனடியாக விலக்கப்பட வேண்டும்;

மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றம் மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் என்று உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் சார்பாக மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி வலியுறுத்துகின்றது.

தங்களின் இந்த நடவடிக்கை வரலாற்றில் தமிழர்கள் அனைவராலும் நன்றியுணர்வோடு போற்றப்படும் என உறுதியாகக் கூறுகின்றோம்.

நன்றி.

**வே. ஆனைமுத்து**
பொதுச்செயலாளர்

# தமிழ்த்தேச விடுதலைத் திசைவழிக்கு எதிராய் பார்ப்பனியத்தின் உள்ளடி வேலைகள்



● பொழிலன் ●

கொரோனா நெருக்கடியை இந்தியப் பார்ப்பனிய அரசு தன் அரசதிகார வெறியை நிலைப்படுத்திக்கொள்ள முழு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.. கொரோனாவை ஒழிப்பதற்கு அது திட்டமிட்டதாகத் தெரியவில்லை. மாறாக, இந்தச் சூழலைப் பயன்படுத்தி அரசுக்கு எதிராக, ஆரியப் பார்ப்பனிய அதிகாரத்திற்கு எதிராக உள்ள அனைத்து இருப்புகளையும், முயற்சி களையும், கருத்துகளையும் அழித்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது..

மொழித்தேசங்களை அழிக்க ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே பண்பாடு, ஒரே மொழி, ஒரே வாழ்வியல், ஒரே வரலாறு, ஒரே ஓர் ஆட்சி, ஒரே ஒரு கட்சி - என்று மக்க ளாட்சி முறைக்கு மாறான முற்றதிகார ஆட்சிமுறைக்கு வழிவகுக்கும் ஆர்எஸ்எஸ்-இன் திட்டத்தைப் படிப் படியாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கல்விக்கூடங்கள், கல்வி முறைகள், ஊடகத் துறைகள், ஆட்சித் துறைகள், ஞாய(நீதி)த் துறைகள் வழிபாடு, வாழ் வியல் முறைகள், வரலாற்றியல், தொல்லியல் துறைகள் - என அவற்றிற்கான எல்லாவகை அடித்தளங்களையும் எப்படி அமைத்துக்கொள்ளலாம் என ஏற்கனவே ஆர்எஸ்எஸ் உள் ளிட்ட ஆரியச் சார்புக்கட்சிகள் அமைத்துவிட்டிருப்பதால் பாஜக அரசு ஆட்சிக்குவந்து அவர்கள் கோடுபோட்ட பாதை யில் மிக எளிதாக சாலை போட்டுக்கொண்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் உணர்ந்துகொள்ளவும், அவற்றி லிருந்து தங்களை மீட்டு உரிமைப்படுத்திக்கொள்ளவும் அடிமைப்பட்டுள்ள ஒவ்வொரு மொழியின மக்களும் செயல்பட்டாக வேண்டும். அவ்வகையில் ஒவ்வொரு தேசத்திலும் என்னென்ன நடந்தன, நடக்கின்றன என்பது குறித்தும், தமிழகத்தில் ஆரிய அதிகார வகுப்பின் உள்ளடி வேலைகள் என்னென்ன நிலையின என்பது குறித்துமான ஆய்வே இக்கட்டுரை.

ஏற்கெனவே, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட அரசியலும் நடைமுறைகளும் வெவ்வேறு வழித் தடங் களில் சென்று கொண்டிருக்கிற நிலையில் பல்வேறு குழப்பங்கள்...

தமிழ்நாடு விடுதலையா? தமிழீழ விடுதலையா? அல்லது இரண்டையும் இணைத்து ஒன்றாக முயற்சி செய்வதா? இரண்டையும் சேர்த்தா? தனித்தனியாகவா? அது முதலிலா, இது முதலிலா? ... இப்படி ஒரு வகைக் குழப்பம்..

தமிழ்நாட்டின் விடுதலைக்குரிய முதன்மை எதிரி யார்? இந்தியமா? திராவிடமா? திராவிடத்தை ஒழிக்காமல் இந்தியத்தை ஒழிக்க முடியுமா? திராவிடமே இரண்டகம் இழைத்தது. அதனால் அதையே முதலில் ஒழிக்க வேண்டும்! இரண்டையும் ஒரே இலக்கில் எதிர்த்திட வேண்டும்... இப்படியாக ஆரியத்திற்கெதிராக நூற்றாண்டு களுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஓர் அடையாளச் சொல்லான 'திராவிடம்' என்பதை, 'திராவிட நாடு' என்று இப்போது இல்லாத ஒன்றையும், யாரும் இப்போது சொல்லாத ஒன்றையும் பொய் உருவாய்க் காட்டி அதை எதிர்ப்பதான இன்னொரு வகைக் குழப்பம்...

தமிழ்நாட்டிற்குக் காவிரிநீரைத் தரமறுப்பவர்கள் கன்னட இனவெறியர்களே... முல்லைப்பெரியாற்று நீரைத் தடுப் பவர்கள் மலையாள இன வெறியர்களே; அவர்களே தமிழர் களின் முதற்பகைவர்கள்... இப்படியாக அவர்களையே உடனடி எதிரிகளாகக் காட்டிச் செயல்படும் வழித்தடக் குழப்பம்...

தமிழ்நாடே அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையில், அதை மீட்பதற்கான இலக்கின்றி, தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில் தமிழர் ஒருவரையே முதலமைச்சராக்க வேண்டும்... பிறப்பால் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர் ஒருவர் முதலமைச்சராக இல்லாததால் தான் தமிழர்களுக்கு இவ்வளவு பெரிய இழப்புகளும் ஏமாற்றங்களும்... என்று தமிழ்த்தேச விடுதலை அரசிய லையே தடம் மாற்றித் தன்னை முதலமைச்சராக்கிக் கொள்ள முனையும் சிலரின் திசைவழியிலான இன்னொரு வகைக் குழப்ப வழித்தடம்...

இப்படியாகக் குழப்பப்படும் நிலையில், தமிழக மக்க ளிடையே தமிழ்த்தேச இயக்கங்களும், பொதுவுடைமை

இயக்கங்களும், சாதி ஒழிப்பு இயக்கங்களும் செய்கிற களப் பணிகளைவிட வைதீகப் பார்ப்பனியச் சார்பிலான ஆர்எஸ்எஸ்-சின், அதன் பரிவார அமைப்புகளின் களப்பணிகளே அதிகமாகி வருகின்றன... அவற்றுக்குச் சார்பாக இயங்கும் கட்சிகளும், இயக்கங்களும் தனி யாட்களும் அவற்றுக்குக் களம் அமைத்துத் தருகின்றனர்...

தமிழ் உணர்வைச் சிதைப்பதற்கும், சாதிய உணர்வு களை அதிகப்படுத்துவதற்கும், சாதி சார்ந்த மக்களிடையே உள்ள பகைப் போக்குகளை வளர்ப்பதற்கும், மதவியல் மூடநம்பிக்கைகளை அதிகப்படுத்துவதற்கும், தமிழகம், தமிழ்நாடு என்பதான அடையாளங்களே இல்லாமல் செய்வதற்கும் அத்தகைய வைதீக இயக்கங்கள் திட்ட மிட்டுச் செயலாற்றி வருகின்றன.

தமிழகத்தில் உள்ள தேர்தல் கட்சிகளுக்குள் தொடங்கி, இயக்கங்கள் பலவற்றுக்குள்ளும், உள்ளூரில் இருக்கும் சிறுசிறு மன்றங்களுக்குள் வரையிலும் நுழைந்து அவற்றைத் தன்வயப்படுத்துவது அல்லது கூறுபடுத்துவது, அவற்றின் குறிகோள்களை, கொள்கைகளை மாற்றுவது, அவற் றிடையே இந்துத்துவ வெறியை ஊட்டி அவர்களின் அறிவை நஞ்சாக்குவது போன்ற எண்ணற்ற வேலைகளே இப்போது அதிகமாக நடந்து வருகின்றன.

அவ்வகைப் போக்குகள் எவ்வாறெல்லாம் நடை பெற்றன, நடைபெற்று வருகின்றன அவற்றையெல்லாம் எவ்வாறு எதிர்கொள்வது என்பதான செய்திகளைக் குறிப் பாகவாவது தமிழர்கள் அறிந்தாகவேண்டும் என்பதற் காகவே இக்கட்டுரை சில விளக்கங்களைத் தருகின்றது.

**பிற கட்சிகளைப் போல பா.ஜ.க.வும் ஒரு கட்சியா?**

திமுக போல, அதிமுக போல, மதிமுக போல இன்னும் பிற கட்சிகளைப் போல... பாஜகவும் ஒரு கட்சி தானே! அதை மட்டும் ஏன் கடுமையாக எதிர்க்கவேண்டும்..? அதில் சேர்வது மட்டும் என்ன வகையில் தவறு..? என்ப தாகவும், ஆர்எஸ்எஸ் அப்படி என்ன பெரும் கொடுமை களைச் செய்துவிட்டது..? அதன்மீது எதற்காக இவ்வளவு கடுமையான எதிர்ப்புகளைச் செய்ய வேண்டும்..? என்றும், பார்ப்பனச் சாதியினரா தாழ்த்தப்பட்டவர்கள் மீதும் பிற்படுத்தப்பட்டவர்கள் மீதும் தாக்குதல் நடத்துகின்றனர்..? சாதி வெறியோடு, வன்முறை செய்பவர்கள் இடைநிலைச் சாதி வெறியர்கள்தாமே அவ்வாறு செய்கின்றனர்..

அவர்களை எதிர்க்காமல் பார்ப்பனர்களை எதிர்க்க வேண்டும் என்கிறீர்களே..! என்றும் அறியாத பலரும் இப்போதும் கேள்வி எழுப்பி வருகின்றனர்...

குமுகச் சூழல் காரணமாக நடைமுறை அளவில், மற்ற கட்சிகள் சாதியைப் பயன்படுத்தித் தங்கள் கட்சியை வளர்த்துக் கொள்ளவும்,தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்றும், தங்கள் அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கருதுகின்றனவேயன்றி, சாதி இருக்க வேண்டுமென்றோ, வர்ண வேறுபாடுகள் இருக்கவேண்டும் என்றோ, மூடநம்பிக்கைகள் பரப்பப்பட வேண்டும் என்றோ, அப்போக்குகளைத் தங்கள் கோட்பாடாகக் கொள்கையாகவோ அவை வைத்திருக்கவில்லை.

ஆனால், ஆர்எஸ்எஸ்-சிற்கும், பாஜக-விற்கும் அவை தாம் கொள்கையும் கோட்பாடும். எனவே அக் கோட் பாட்டைத் தாங்களாகவும் அல்லது கூலிக்கு ஆட்களை வைத்தும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

காந்தியைக் கொலை செய்தது தொடங்கி எனத் தொடர்ந்து காலம் நெடுகிலும் கொலை செய்ததும்; கல்புர்கி, தாபோல்கர், கௌரி லங்கேஷ் எனத் தொடர்ந்து செய்து வருவதும்; மண்டைக்காடு கலவரம், குஜராத் கோத்ரா வண்டி எரிப்பு - தொடர்ந்த கலவரங்கள், கோவைக் கலவரங்கள், மும்பைக் கலவரம் எனப் பன்னூறு மத, சாதிக் கலவரங்களை நேரடியாக ஆர்எஸ்எஸ் உறுப்பினர்களே செய்யாமல் இருக்கலாம். ஆனால், அவர்களின் கூலிப் படைகள்தாம் செய்தன என்பது அனைவரும் அறிந்ததே.

நாடார், முக்குலத்தோர், வன்னியர், கவுண்டர் என்கிற ஒரு குறிப்பிட்ட சாதி என்பது ஒரு கோட்பாடு இல்லை. அவற்றின் ஆண்டைகள் சிலர் அவர்களின் வகுப்பு (சாதி-வர்க்க) அதிகாரத்தை நிலைப்படுத்திக்கொள்வதற்கான வகையில் தூண்டி, கூலி ஆட்களை வைத்துக்கொண்டு வெறிச்செயல் செய்துவருகின்றனர். ஆனால், ஒவ்வொரு சாதிக்குள்ளும் அச்சாதியின் பெரும்பான்மை மக்கள் ஏழை அடித்தட்டு மக்களாகவே உள்ளனர்; அவர்கள் தங்கள் வாழ்நிலையிலிருந்து விடிவைக் காண வேண்டு மான நோக்கம் உடையவர்கள்.

மார்க்சியம் தங்கள் வாழ்நிலை விடுதலைக்கு வழி சொல்வதாக அவர்களுள் சிலரும், பெரியாரியம் தங்கள் விடுதலைக்கு வழி சொல்வதாகச் சிலரும், வள்ளலார் வழி செயல்படுகின்றவர்கள் ஒரு பகுதியினரும், வைகுண்டர் வழி, பசும்பொன் முத்துராமலிங்கனார் வழி செயல்படு கின்றவர் என்று ஒரு பகுதியினரும் என்று அவரவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கையை நோக்கிச் செயல்படுவ தோடு மேற்படி அந்தந்தச் சாதிகளுக்குள்ளான வெறிப் போக்குகளை எதிர்க்கவும் கண்டிக்கவுமான நிலைப்பாடு கொண்டுமிருக்கின்றனர்.

ஆனால், பார்ப்பனியத்தைக் கோட்பாடாக ஏற்றுக் கொள்பவர் எவரும் சாதி ஒழிப்பை ஏற்பதில்லை, (தீண்டாமையை ஒழிக்கவேண்டும் எனப் பசப்பு மட்டுமே பேசுபவர்கள்) வர்ண ஒழிப்பை ஏற்பதில்லை; முதலாளிய ஒழிப்பை ஏற்பதில்லை; மத மறுப்பை ஏற்பதில்லை; மூடநம்பிக்கை எதிர்ப்பை ஏற்பதில்லை.

எனவே, பார்ப்பனியமே சாதிக்கு, வருணத்திற்கு, மதத்திற்கு, மூடநம்பிகைகளுக்கெல்லாம் பக்க வலுவாய் இருந்து காத்து வருவதை அறியமுடியும். அதன் வழியில் பார்ப்பனிய அதிகாரத்தை ஒழிப்பது என்பதும் மேற் சொல்லப்பட்ட அதிகாரங்களை ஒழிப்பது என்பதும் பிரிக்க முடியாதவை. அவை அனைத்தோடும் பார்ப்பனியம் ஒன்றைஒன்று சார்ந்ததாகவே இயங்குகிறது.

பார்ப்பனியம் என்பது பார்ப்பனர்கள் மட்டுமே அன்று. பார்ப்பனர்களில் 90 விழுக்காட்டிற்கும் மேற்பட்டவர்கள் பார்ப்பனிய அதிகாரங்களைக் கொண்டவர்கள் என்பதால் இயல்பாகவே அவர்களின் அதிகாரமும் எதிர்க்கப்பட வேண்டிய நிலையிலாகின்றது. பிற சாதிகளைச் சார்ந்த சிலரும் பார்ப்பனிய அடிவருடிகளாகச் செயல்படுவதால்

அந்த அடிவருடிகளும் அந்த அரங்குக்குள் இருப்பதன் வழி எதிர்க்கப்பட வேண்டியவர்களாகின்றனர்.

எனவேதான், இந்தியப் பார்ப்பனியத்தின் கருவாக இயங்குகிற அனைத்துக் கட்டமைப்புகளையும், குறிப்பாக ஆர்எஸ்எஸ்-சையும், அதன் ஆக்டோபசுக் கைகளாக இருக்கிற பாஜக உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட சங்பரிவார் அமைப்புகளையும் எதிர்க்கவேண்டியுள்ளது.

அவ்வகையில், முதலில் ஆர்எஸ்எஸ் கொள்கைகள், கோட்பாடுகள், நடைமுறைகள் பற்றி (அவை குறித்தெல்லாம் விரிவாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன என்றாலும், அவற்றின் சாரத்தைப் பற்றி)ச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வோம்.

### ஆர்.எஸ்.எஸின் கொள்கை கோட்பாடுகள்

பல்வேறு மொழித் தேசிய இனங்கள் இந்தியாவிற்குள் இருக்கக் கூடாது என்கிறது ஆர்எஸ்எஸ்... அதாவது 'இந்தியா' என்பது 'இந்து நாடு'; 'இந்து' என்பது ஓர் இனம்; அதற்கென்று ஒரு தனித்த பண்பாடு வாழ்க்கை முறைகள் உண்டு; அந்த வாழ்க்கை முறைக்குள் உட்பட்டவர்கள்தாம் சமணர்களும் புத்த சமயத்தவர்களும், சிவனியர்களும், வைணவர்களும், கடவுள் இல்லை - மதம் இல்லை என்பவர்களும்கூட... அதாவது, இந்தியாவிற்குள் பிறந்து சில காரணங்களால் மதம் மாறிப் போனவர்களும் அவர்கள் இங்குள்ள வாழ்முறையை ஏற்கிறபோது அவர்களும் இந்துக்கள்தாம் என்கிறது, ஆர்எஸ்எஸ்.

கல்வியில், வைதீகக் கல்வி முறைதான் இருக்க வேண்டும் என்கிறது; சமற்கிருதமும் இந்தியுமே கல்வி மொழியாகக் கட்டாயப்படுத்தவேண்டும் என்கிறது; (சமற்கிருதம் இந்தியாவின் பொதுமொழியாக ஆட்சி மொழியாக ஆக்கப்படுகிற வரை, இந்தியே இருக்கலாம் என்பதே அவர்களின் கொள்கை) ஆங்கிலமோ பிற மொழிகளோ கூடாது என்பதும்; வேண்டுமானால், தாய் மொழியை மொழிப்பாடமாக மட்டும் படிக்கலாம் என்பதும்; இந்துப் பண்பாடு வாழ்முறைகள் மட்டுமே கல்வியாகக் கற்பிக்கப்படவேண்டும் என்றும்; வேத, வைதீக, புராண சாஸ்திரங்கள் மட்டுமே வரலாறாக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான வேலைகளைச் செய்கிறது.

கல்வி அனைவருக்குமாக, இலவயமாகத் தரப்பபட வேண்டும் என்பதற்காகவோ, வெளிநாட்டினர் பலரும் இங்கு வந்து கல்விக்கூடங்கள் அமைத்து இண்டர் நேஷனல் பள்ளிகள் நடத்துவதை மறுத்தோ, சிபிஎஸ்இ, கேந்திரிய வித்யாலயாவில் ஆங்கிலக் கல்வியை மட்டும் முதன்மைப்படுத்தப்படுவதை மறுத்தோ, இங்குக் கல்வி கற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு உழைத்திடுவதைப் பற்றியோ, இங்குள்ள வெளிநாட்டு ஐடி நிறுவனங்கள் வழியும், பிற கனிம வளங்கள் உள்ளிட்ட சொத்துக்களையும், மண்ணின் மக்களின் உழைப்பையும் வெளிநாடுகள் சூறையாடுவதைப் பற்றியோ, ஆர்எஸ்எஸ் கேள்வி கேட்பதும் இல்லை; அவற்றையெல்லாம் எதிர்த்துப் போராடுவதும் இல்லை. திரைமறைவில் அவர்களோடெல்லாம் கூட்டுச் சேர்ந்து பங்கு வாங்கிக்கொண்டு ஆரியக் கருத்தியலுக்குச் சார்பாக அவர்களை வளர்க்கவே செய்கிறது...

சமற்கிருதமே உயர்ந்த மொழி என்றும், மாந்தர்கள் வாழும் இந்த உலகத்தில் மட்டுமல்லாமல் அவர்கள் மறைந்த பிறகு சென்றடைவதாகப் புளுகுகிற தேவலோகம் முழுக்க சமற்கிருதமே மொழி; அதையே அனைவரும் போற்றிக் கொள்ளவேண்டும்; எனவே, அதற்கு அதிகப் படியாகச் செலவு செய்வது தவறு இல்லை என்றும் கூறுகிறது, ஆர்எஸ்எஸ்.

சாதிகள், வருண வேறுபாடுகள் இருந்தால்தான் சமூகத்தில் மேலிருந்துகீழ் வரையான அனைத்துத் தரப்பு வேலைகளும் ஆச்சார ஒழுங்கு முறைகளும் செப்பமாக இருக்கமுடியும் என்கிறது ஆர்எஸ்எஸ்.

ஒவ்வொரு மொழி இன மக்களுக்கும் தனித்தனி வரலாறுகள் என்றெல்லாம் இல்லை; பாரதத்தின் வரலாறே. பழமையான வரலாறு; அதற்குள் உள்ளடக்கப்பட்டவையே பிற வரலாறுகள் எல்லாம்; எனவே, ஒவ்வொரு மொழித் தேசத்திற்கும் தனித்தனிவரலாறுகள் உண்டு என்பதும், குமுக வாழ்முறைகள், பண்பாடுகள் உண்டென்பதும் அப்பட்டமான பிரிவினைவாதம் என்கிறது ஆர்எஸ்எஸ்..

சுதேசி என்று முழக்கமிட்டாலும் அமெரிக்காவுடனும், பிற வல்லரசு நாடுகளுடனும் கூட்டுச்சேர்ந்து, அந்நாட்டு முதலாளிகளை அழைத்துவந்து இங்குள்ள வளங்களை எல்லாம் சூறையாடிக் கொண்டுசெல்ல வழி அமைத்துத் தருகிற இந்திய அரசே 'தேசிய அரசு' என்றும், மாறாகச் 'சுதேசி' என்கிற வகையில் முதலாளியச் சுரண்டல் கருத்துடைய வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களை எதிர்ப்பதும், வெளியேற்றச் சொல்வதும், அல்லது அதற்காகப் போராடுவதும் தீவிரவாதம் என்கிறது ஆர்எஸ்எஸ்.

மேலும் ஆர்எஸ்எஸ், வைதீகப் பார்ப்பனியக் கோட்பாடுகளுக்கு எதிரான மொழித்தேசங்களைச் சிதைக்கிறது.. பொதுவுடைமைக் கருத்துகளை எதிர்க்கிறது. மொழித் தேசங்களை இரண்டாக மூன்றாகப் பிளவுபடுத்தவேண்டும் என்று கூறுகிறது; அப்படிச் செய்தும் வருகிறது; சமற்கிருதம் இந்தி தவிர்த்த பிற மாநில மொழிகளை இழிவு படுத்திப் புறக்கணிக்கிறது. கோயில்களில் பார்ப்பன அதிகாரங்களைச் செலுத்தி சமற்கிருதத்தில் மட்டுமே வழிபாடு, குடமுழுக்குகளைச் செய்ய வலியுறுத்துகிறது..

அனைத்துக் கோயில்களிலும், அனைத்துச் சாதியினரையும் பூசாரிகளாக ஆக்கவேண்டும் என்றோ, திருமணம் உள்ளிட்ட வாழ்க்கைச் சடங்குகளை அனைத்துச் சாதியினரும் செய்யலாம் என்றோ ஆர்எஸ்எஸ் வலியுறுத்துவது கிடையாது.

தீண்டாமையை எதிர்ப்பதாக மேலோட்டமாகப் பேசியும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் எனச் சாதியக் கண்ணோட்டத்தோடு குமுகத்தை இயக்கி வருவதும், சாதிய உணர்வுகளும் வெறித் தனமும் குமுகத்தில் நீங்கிடாதபடி கவனித்துத் தூண்டிவிடுவதும், எந்த நிலையிலும் இடஒதுக்கீட்டை ஏற்காமல் மறுப்பதும் ஆர்எஸ்எஸின் திட்டமிட்ட தொடர் வேலையாக இருந்து வருகிறது... மதங்களுக்கு இடைப்பட்ட முரண்களை

உருவாக்கி இந்து - வைதீகவெறி உணர்வைத் தூண்டி, குமுகத்தில் உள்ள எல்லா வகைச் சிக்கல்களுக்கும் வைதீக - இந்து அல்லாத பிற சமயத்தினர்களே காரணம் என்பதாகக் காட்டி வருகிறது.

சமணம் தொடங்கி புத்த சமயத்தினரையெல்லாம், அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு கொலை செய்ததும், தீயிட்டதுமான வெறித்தன வைதீக வெறியால் அழித்த கடந்தகால வரலாறும்.. அதன் தொடர்ச்சியாய்ப் பின்னர்க் கிறித்தவர்களை, இசுலாமியர்களை என அனைவரையும் எதிர்ப்பதன்மூலம், கலவரம் நடத்தி அழித்ததுடன், அவர்களை எதிர்த்து அடக்கித் தங்களை மட்டுமே கொண்டதான பாரத நாட்டை உருவாக்கினால் தான் எல்லாச் சிக்கல்களும் தீரும் என்பதாகக் கதை கட்டியது; இப்போதும் கதைகட்டி வருகிறது, ஆர்எஸ்எஸ்.

மொத்தத்தில் கடந்தகாலப் பார்ப்பனர்களின் வெறித்தனங்களை, வேத, மனுதர்ம, அர்த்தசாத்திரக் கொடுமைகளை - வன்முறைகளையே கொள்கையாக, கோட்பாடாக நடைமுறையாக உள்ளடக்கத்தில் கொண்டிருப்பதே ஆர்எஸ்எஸ்...

இப்படியான நோக்கங்களுக்காக 1925-இல் தொடங்கப்பட்ட ஆர்எஸ்எஸ், அதை வளர்த்துக்கொள்வதற்காகவும் வைதீக பாரதத்தை உருவாக்கிக் கொள்வதற்காகவும் செயல்படுத்தும் தில்லுமுல்லுகள், அடாவடித்தனங்கள் கொஞ்சநஞ்சமல்ல..!

ஆர்எஸ்எஸ் தொடங்கப்படுவதற்குமுன் ஏறத்தாழ நூறாண்டுகள் அளவில் வைதீகப் பார்ப்பனியத்தின் கீழ் இந்துக்களை அணி திரட்டிட வேண்டுமான நோக்கத்தில் வங்காள, குசராத்திய, மராட்டிய, கொங்கனிய பிராமணர்கள் பல்வேறு இயக்க, செயல் முயற்சிகளைச் செய்தனர்.. அவற்றின் தொடர்ச்சியின் இறுதியாகவே ஆர்எஸ்எஸ் தொடங்கப்பட்டது.

மூஞ்சே, பாஞ்சிசடெ, எட்கேவர், தபல்கர், சாவர்க்கர் என ஐவரால் ஆர்எஸ்எஸ் தொடங்கப்பட்டிருந்தாலும், முதல் ஒருங்கிணைப்புத் தலைவராக இருந்தவர் எட்கேவர்.

எல்லா மொழித்தேச மக்களையும் தங்களின் கொள்கை, கோட்பாடுகளுக்கு அடிமைகளாக்கி ஆள்வதற்காக அது எடுத்துக்கொண்ட வேலைத்திட்டங்கள் விரிவானவை.

ஒவ்வொரு மொழித் தேசங்களுக்குள்ளாகவும் அதன் கொள்கைகளையும் அமைப்பையும் கட்டமைத்துக் கொள்வதற்காக அது செய்த சூழ்ச்சிகள் கட்டாயம் அறியப்பட வேண்டியவை.. மிக விரிவானவை..!

**அவ்வகையில் தமிழ்நாட்டிற்குள் அது நுழைந்ததும், நுழைந்து காலூன்றுவதற்கு அது எடுத்துக்கொண்ட முயற்சிகளும் மிகப்பெருமளவில் கவனிக்கப்பட வேண்டியவை..!**

ஆரியப் பார்ப்பனியத்திற்கு எதிராக இயங்கிக் கொண்டிருந்த தமிழ் உணர்வாளர்களை, தமிழ்த்தேச உணர்வாளர்களை, பார்ப்பனிய எதிர்ப்பு உணர்வாளர்களை, சாதி ஒழிப்பு நோக்க உணர்வாளர்களை, சமன்மை இலக்கு நோக்கிய உணர்வாளர்களை எல்லாம் கடந்து ஆர்எஸ்எஸ் தமிழ்நாட்டிற்குள் எப்படி நுழைந்தது? தனது பரிவாரங்களுடன் எப்படி நுழைந்து கொண்டிருக்கிறது? என்பதைக் கூர்ந்து கவனித்திடாமல், அதை நாம் தடுத்துவிடவோ, எதிர்த்துவிடவோ இயலாது..!

எனவே, ஆர்எஸ்எஸ், தமிழ்நாட்டிற்குள் நுழைந்த வரலாற்றையும், அது தமிழ்நாட்டிற்குள் நிலையாய்க் காலூன்றுவதற்காக நடத்திக் கொண்டிருக்கக்கூடிய சூழ்ச்சியான உள்ளடி வேலைகளையும் சுருக்கமாகப் பார்க்கலாம்.

பார்ப்பனிய வெறிக் கருத்துகள் தமிழ்நாட்டிற்குள் நுழைந்து ஆயிரமாண்டுகளுக்குமேல் ஆகிவிட்டன. வைதீகம் எனும் பெயரை உருவாக்கிக்கொண்டு அப்போதைய அரசர்களையும், நிலவுடைமை ஆண்டைகளையும் அண்டித் தங்களைத் தக்கவைத்துக்கொண்டனர்.

சமற்கிருதத்தைத் ‘தேவமொழி’ என்று உயர்த்திக் கூறிக் கொண்டனர்; தங்களைத் ‘தேவ உலகத்தினர்’ என்று கூறிக்கொண்டனர்; மனுதர்மங்களும், வேதங்களும் அவ்வாறே சொல்வதாகக் கூறினர்.

பிரம்மா என்பவரே ‘படைப்புக் கடவுள்’ என்று கதை கட்டிவிட்டனர். அந்தப் பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தவர்களே பிராமணர்கள் என்றனர் (இரிக்கு வேதம் எட்டாம் கட்டளை). பிராமணர்கள்தாம் பிற வர்ணத்தவர்களுக்குத் தெய்வம் என்றனர் (பத்தாம் சுலோகம் - மனுதர்மம் - அத்தியாயம் 1 சுலோகம் 100).

பார்ப்பனர்கள், அரசர்கள் வழியாகவும், நிலவுடைமையாளர்கள் வழியாகவும் நிலத்தையும் பொன்னையும் பொருளையும் கொடையாகப் பெற்றனர்.

தமிழர்களின் அறிவைப் பறித்து சமற்கிருதத்தில் எழுதிக் கொண்டபின், தமிழ் இலக்கியங்கள் பலவற்றை அழித்துவிட்டனர். குறிப்பாக மருத்துவம், வானியல், கணக்கியல், மெய்யியல் என அவர்களால் திருடப் பட்ட துறைசார்ந்த இலக்கியங்கள் பல.

ஆளவந்த வந்தேறி அரசர்களுடனெல்லாம் உறவாடி, தமிழர்களையும் தமிழ்நாட்டையும் அவர்களுக்குக் காட்டிக் கொடுத்ததோடு, அவர்களுக்குத் துணை நின்று பார்ப்பனியச் சார்புடைய அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொண்டனர்.

அதே தொடர்ச்சியில்தான் ஆங்கிலேயர்கள் வணிகத்திற்காக நுழைந்தது தொடங்கி, அவர்கள் ஆட்சியை உருவாக்கிக் கொண்டபின், ஒருபுறம் அவர்களின் அதிகார அணிகளுக்குத் துணையாக இருந்து ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்கவும், இன்னொருபுறம் ஆங்கிலேய எதிர்ப்புக்குரிய விடுதலைப் போராட்டங்களைத் தங்கள் தலைமையில் ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் வைதீகப் பார்ப்பனியம் இருதலைப் பாம்பாகச் செயல்பட்டது.

பார்ப்பனியச் சார்பு நிலைக்கு அல்லாத தலைமைகளிடம் விடுதலைக்குப் பின் இந்திய அதிகாரம் போய்விடப் போகிறது எனும் அச்சத்தில், முழுக்கமுழுக்கப் பார்ப்பனிய அதிகாரத்தை நிறுவும்படியான அதிகாரம் வாய்ந்த ஓர் அரசை உருவாக்கும் நோக்கத்திலேயே பார்ப்பனர்கள் 1925-இல் ஆர்எஸ்எஸ்-சை உருவாக்கினர்.

**(தொடரும்)**

# திருக்குறளில் பெண்ணின் பெருமை

பேராசிரியர் இரா. சோதிவாணன்

தென்னாட்டின் பொன்னேடாம் திருக்குறள் இந்நாட்டில் மட்டுமின்றிப் பன்னாட்டு மொழிகளிலும் 'அறம்' பாடிப் புகழ்வீறு பெற்றுள்ளது. எக்காலமும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உயிர்ப்பான உயர்ந்த கருத்து களைக் கொண்டு உலகப் பொதுமறையாக ஒளிர்ந்து கொண்டுள்ளது.

அத்தகைய திருக்குறளை மனு நூலோடு ஒப்பிட்டுக் குறளின் பெருமையை 'மட்டம் தட்ட' ஆரியரும், ஆரிய அடிவருடிகளும் முயன்று வருகின்றனர்.

ஈரோட்டுப் பெரியாரை ஈர்த்த ஒரே அறநூல் இலக்கியம் திருக்குறளே ஆகும். ஒரு குலத்துக்கு ஒரு நீதி சொல்லும் - பெண்ணின் பெருமையைச் சிறுமைப் படுத்தும் மனுநூலைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றித் தீயெரிப்புத் தண்டனையும் தந்தவர், தந்தை பெரியார்.

அந்நூல் எப்போதோ வழக்கொழிந்துவிட்டது. ஆனாலும் இப்போது மனுவைத் தாங்கிப் பிடித்துத் தூக்கி நிறுத்த ஒரு 'கூட்டம்' முயல்கிறது. அத்தோடு நில்லாமல் அக்கூட்டம் திருக்குறள் மீது ஒரு பழி சுமத்துகிறது. "'மனுநூல்' பெண்களை இழிவுப்படுத்துகிறது என்று பேசுகின்ற நீங்கள், திருக்குறள், 'பெண்வழிச்சேறல்' என்ற அதிகாரத்தில் பெண்களை இழிவுபடுத்துகிறதே, அதற்கு என்ன விடை சொல்லப் போகிறீர்கள்?" என்று கேட்கிறது. அந்த வினாவுக்கு விடை சொல்லவே இக் கட்டுரை.

திருக்குறள் 'பெண்வழிச்சேறல்' என்ற அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களையும் ஊன்றிப் படித்தால் ஓர் உண்மை புலனாகும், தம் பெண்மையை நயக்கும் ஆண் களை, அதனாலேயே மயக்கித் தம் விருப்பப்படி செயல் பட வைக்கும் பெண்களையே மறைமுகமாகச் சாடுகிறது. காம இன்பத்தில் எளியராக இருக்கும் ஆண்களின் கன்னங்களில் வெளிப்படையாகவே 'பளார், பளார்' என்று பத்துக் குறள்களும் அறைகின்றன என்பது புலனாகும்.

இனி, அவ்வதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு குறளின் கருத்தையும் நோக்குவோம். அதற்கு முன்பு, பரிமே லழகரின் உரையை ஒட்டி எழுந்த கருத்தை அறிவோம். காமத்தால் வருபவை நேரே பகையல்ல; ஆயினும் ஆக்கம் சிதைத்தல், அழிவுகளைத் தருதல் என்னும் தொழில்களால் பகையோடு ஒப்பாகும். அதனால், ஆடவன் தன் மனைவி மேலுள்ள காமத்தால் அவள் முரண்பாடுகளைக் கண்டு கொள்ளாது, அறம், பொருள் ஆகியவற்றை மறந்து துறந்துவிடக்கூடாது என்பதற்காக ஆணுக்கு எச்சரிக்கை - இடித்துரை வழங்கும் அதிகாரம் 'பெண்வழிச்சேறல்' என்னும் அவ்வதிகாரம்.

**குறள் 1:** இன்பம் காரணமாகத் தம் மனைவியை விழைந்து அவள் தன்மையராய் நடக்கின்றவர், தமக்கு இனிய துணையாகிய அறத்தினை எய்தமாட்டார். இகிழ்ச்சிக் குரிய பொருளாகக் கூடியது அவ் இன்பம்.

ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, பொலிவு, அழகு, சாயல், நாணம், மடன், நோய், வேட்கை (விருப்பம்), நுகர்தல் (இன்பம் துய்த்தல்) போன்ற சொற்களின் பொருள்களை நெஞ்சால் உணரமுடியும்; பருப்பொருள்கள் போன்று காட்ட முடியாது. அவை நுண்பொருள்கள் என்று கூறுவர் என்பது தொல்காப்பியம் (தொல். பொருள். நூற்பா 1193). அதனால்தான் திருவள்ளுவரும் மனைவியை விழைந்து அவள் தன்மையனாய் நடக்கின்றவன் பெறுகின்ற இன்பம் இகழ்ச்சிக்குரிய பொருளாகும் என்று கூறுகிறார்.

வினையே ஆடவர்க்கு உயிர். அவ் வினையை ஆற்றினால்தான் ஆடவன் பொருள் பெற்று (பருப் பொருள்) அறம்புரிய முடியும். அன்பின் இணைந்த இன்பம் பெற முடியும். அவ்விரண்டும் தவிர்த்து மனைவியிடம் இன்பம் பெறுவதற்காக எளியனாய்த் தாழ்ந்து போகின்றவன் இகழ்ச்சிக்குரியவன் ஆவான் என்பது சொல்லாமலே விளங்கும்.

**குறள் 2 :** தன் ஆண்மையைவிட்டு மனைவியின் பெண்மையை எப்போதும் விழைபவன் எய்தி யிருக்கும் செல்வம், இவ்வுலகத்தில் ஆண் பாலார்க்கு எல்லாம் பெரிய நாணத்தைத் தருவதோடு தனக்கும் நாணத்தைக் கொடுக்கும்.

**குறள் 3 :** இல்லாளிடத்தில் தாழ்தற்குக் காரணமாகிய காம இச்சை, அத்தகைமை இல்லாத நல்லவர்களைக் காணும் எப்போதும் நாணத்தையே தந்து கொண் டிருக்கும்.

**குறள் 4 :** தன் மனைவியை அஞ்சி ஒழுகுகின்றவனுக்கு ஆண்மை வீறு ஏற்படாது.

**குறள் 5 :** தன் மனைவிக்கு அஞ்சுகின்றவன் நல்லவர்க்கு நல்லன செய்யவும் அஞ்சுவான். சுற்றத்தார்க்கும் ஏதிலார்க்கும் நன்மைசெய்ய நினைப்பினும், மனைவி என்ன சொல்வாளோ, தன்னைத் தொட விடமாட் டாளோ என்ற அச்சத்தால் நல்லவை செய்யாதிருப்பான்.

**குறள் 6 :** மனைவியின் மூங்கில் போன்ற தோளினைத் தழுவ அஞ்சுவார். வீரத்தால் துறக்கம் எய்திய அமரர் போல இவ்வுலகத்தில் வாழ்ந்தாராயினும் ஆண்மை இலர்.

**குறள் 7 :** காமப் பயன் கொள்வான் வேண்டி, நாண மில்லாமல் தன் மனைவியின் ஏவல் தொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண்மைத் தன்மையைவிட நாணத்தை உடைய அவளின் பெண்தன்மையே மேம்பாடு உடையது.

**குறள் 8 :** தான் வேண்டிய வழியிலின்றித் தன் மனைவி வேண்டியவாறு ஒழுகுபவன் தன்னோடு நட்புக் கொண்டோரின் உற்ற குறையைப் போக்கமாட்டான்; அறச்செயல் நன்மையும் செய்யமாட்டான்.

**குறள் 9 :** பெண் இன்பம் விழைந்து தாழ்ந்தோன்; பெண்ணின் ஏவல்படி நடப்போன் அறம் புரியவும் மாட்டான்; அதற்கு வேண்டிய பொருள்திரட்சி செய்ய ஊக்கமும் கொள்ளமாட்டான்.

**குறள் 10 :** வேந்தர்க்கும், காம இன்பத்தில் தோய்வாரானால் புகழ்ச்சி இல்லை.

ஒத்த அன்பினராக உள்ள கணவன் மனைவியிடம் இணை விழைச்சு இயல்பாக இனிதாக ஏற்பட வேண்டியது இயற்கையாகும். மலரினும் மெல்லியது காமம் என உணர்ந்தார்க்கு இருவர் மாட்டும் 'நிறுத்த காம வாயில்' - (காமம் துய்த்தற்கு உரிய உள்ளக் கிளர்ச்சி) தோன்றக் கூடுவார்க்கு இன்ப நிறைவு ஏற்படும். அவ்வாறு இல்லாமல் கணவன் மட்டும் மனைவியிடம் இன்பம் பெற, அள வில்லாத அவாவைக் காட்டினால், மனைவி அவனை எளியனாய், தாழ்வுடையோனாய் கருதித் தன் விருப்பப் படி ஆட்டிவைப்பாள். தன்வயமாக்கித் தன் ஏவல் செய்ய விடுவாள். "உரனும் ஆண்மையும் ஆடவர்க்குரிய பண்புகள். அவற்றைவிடுத்து பெண்ணின்ப நாட்டத்தில் அவள் வழி ஒழுகுவான். நல்லோரால் பழிக்கப்படுவான். அறம் புரியாது தடுக்கப்பட்டுச் சிறுமை அடைவான். நண்பர்களுக்கு, சுற்றத்தினர்க்கு, ஏதிலார்க்கு - உதவமுடியாத இழிதகைமை கொள்வான். வினை ஊக்கம் இழந்து நிற்பான்."

வேந்தர்க்கும் அவ்வாறு ஒழுகின் பழிப்பு ஏற்படும் புகழ்ச்சி விளையாது. ஆட்சி அல்லற்படும். உட்பகை, புறப்பகை அவன் ஆட்சியைக் கவிழ்க்கும்.

எனவே, ஆடவனுக்கு வேண்டிய இயல்பு : 'பெருமை யும் உரனும் ஆடூஉ மேன' (தொல். களவு. நூற்பா 1044) என்பதற்கேற்ப பெருமையும் வலிமையும் ஆடவர்க்கு இயல்பாகும். இது உலகம் முழுவதும் பொருந்தும் என்பதற்கு ஏற்ப ஆடவன் நற்செயல் புரிவதற்கு நல் வழியில் பொருள் ஈட்டி நற்புகழை நிலைநாட்டிப் பெருமை யுற வேண்டும். நல்வழியில் பொருளீட்ட, இடைவரும் இடையூறுகளை வெல்ல மனவலிமை (உரன்) கொள்ள வேண்டும். புகழ்புரிந்த இல்லறம் நடத்தும் இல்லாளை இணைநலமாகத் துணைநலமாக இருத்த, நிறுத்தச் சமவுரிமை வழங்கும் மனவுரம் - பரந்த மனம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இன்றி மனைவியின் பெண்மையைப் பெரிதாக நயந்து, அவளின் முரண்பாடான எண்ணங் களுக்கு அரணாக, அடித்தொழில் ஏவலுக்குப் பணியாள னாக அமைந்து 'அறம், பொருள்' மறந்து ஒழுகும் கணவன் இழிதகைமைக்கு ஆளாவான். நல்லோரால் எள்ளப்படும் பொருளாவன். இத்தகு கணவனைத்தான் திருவள்ளுவர் 'பெண்வழிச் சேறல்' என்னும் அதிகாரத் தில் சாடுகிறார்.

இதற்குச் சான்றாக ஒரு குறுந்தொகைப் பாடலை இங்கே சுட்டுவது பொருத்தமாகும்.

*"கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்*
*பழன வாளை கதூஉம் ஊரன்*
*எம்மில் பெருமொழி கூறித் தம்மில்*
*கையும் காலும் தூக்கத் தூக்கும்*
*ஆடிப்பாவை போல*
*மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே"*

– ஆலங்குடிவங்கனார், (குறுந்தொகை–9)

முன்நிற்பவன் தன் கையையும் காலையும் தூக்கும் போது தானும் கை, கால்களைத் தூக்கும் இயல்புடைய கண்ணாடியில் தோன்றும் பாவையைப் போன்று, தலைவன் தன் மனைவிக்கு அவள் விரும்பியவற்றை அறிந்து அவற்றிற்கு இயைய நடக்கின்றான் என்னும் பகுதியில் நமக்குக் கிடைக்கும் செய்தி இதுதான் : தலைவன் ஆண்மையின் இழிந்து மனைவியைத் தாழ்ந்து ஒழுகு கின்றான். பெண்ணுக்குரிய பண்பு (அடக்கம், அன்பு...) இல்லாதவள் தலைவி (மனைவி) என்னும் அவளுக்குத் தாழ்ந்து ஒழுகும் தலைவன் (கணவன்) ஆண்மை இலன் என்றும் இருவரையும் ஒருசேர இகழ்ந்து உரைக்கிறார், ஒரு பரத்தை வாயிலாகப் புலவர் ஆலங்குடிவங்கனார்,

எனவே, திருவள்ளுவர் 'பெண்வழிச் சேறல்' என்னும் அதிகாரத்தின் வழியாக ஆடவனை, மனைவியிடம் பெண்மையை விழைந்து தன் ஆண்மையை, பெருமையை, மன வலிமையை, இழக்காதே என்றும், அற மறுப்பை, செயல் வெறுப்பை, சான்றோர் பழிப்பைக் கொள்ளாதே என்றும் இடித்துரைக்கிறார். வேந்தனுக்கும் அதையே எச்சரிக்கிறார்; நேரே சொல்லாமல் பண்புநலம் அழிந்த பெண்களின் தகைமையையே மறைமுகமாக, அடிநிலை யாக நமக்கு உணர்த்துகிறார்; நயத்தக்க நாகரிகமாகச் சுட்டுகிறார்.

'பெண்வழிச் சேறல்' என்ற அதிகாரத்தில் ஆடும் (வெற்றியும்), பீடும் (பெருமையும்) இல்லா ஆடவனையே திருவள்ளுவர் சாடுகிறார். இல்லறவியலில் (அறத்துப் பாலில்) 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்தில் பண்புநலன்கள் பொதிந்த பெண்களையே முதன்மையாக - தலைமையாக வைத்து விதந்து போற்றி அறவுரை, அறிவுரை வழங்குகிறார், திருவள்ளுவர்.

*"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலான் பெண்"* (குறள்–56)

என்ற குறள் 'பெண்'ணுக்கு (மனைவிக்கு) இலக்கண விளக்கம் அளித்து நம்மை இன்புறுத்துகிறது.

*"சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை"* (குறள்–57)

மேற்கூறிய 'தற்காத்து...' என்ற சீருக்கு இக்குறள் (57) 'மகளிர், நிறைகாக்கும் காப்பே தலை' என்ற அடியால் 'மனநிறை' விளக்கம் தருவது நயத்தகுவதாகும்.

'பெண்வழிச் சேறல்' என்ற அதிகாரத்தில் வரும் குறள் :

*"இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்*
*நல்லாருள் நாணுத் தரும்"*

என்ற இக்குறள் அவ் அதிகாரத்தில் உள்ள மற்றைக் குறள் களுக்கான கருத்துகளுக்கு ஒரு தானாகித் திரட்சிக்

கருத்தைத் தெரிவிக்கும் நயம் சிறப்புடையது. இல்லாள் கண் தாழ்ந்த இயல்பின்மை என்பதற்கு, மனைவியிடத்துத் தாழ்வதற்குக் காரணமாகிய ஆணியல்பு இல்லாமை; அஃதாவது ஆண்களுக்கு ஆளுந் தன்மையாகிய ஆண்மை, இயல்பு என்பதாகும். அவ்வியல்பு இல்லாத அச்சம் ஆணின் நெஞ்சுக்கும் நாணத்தைத் தரும்.

நல்லோராகிய சான்றோரைக் காண்பதற்கும், அவரிடையே உள்ளபோதும் என்றைக்கும் 'நாணம்' தந்து கொண்டே இருக்கும் என்ற கருத்துத் திரட்சி கண்டு இன்புறலாம். இக்கருத்தை 'நாணுடைமை நாணு' - இழிந்த கருமம் (செயல்) காரணமாக நன்மகன் நாணுதலே (ஆணுக்கு) நாணமாகும். பெண்ணின் நாணம் என்பது அவளின் இயல்புப் பண்பு என்று அரண் செய்கிறார்.

காமத்துப் பாலில், 'நாணுத் துறவுரைத்தல்' என்னும் அதிகாரத்தில் தலைமகன் கூறுவதை அறிக. நாணமும் நல்ல ஆண்மையுமாகிய தோணிகளைக் காமம் என்னும் கடுமையான வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விடுகின்றது என்கிறான் தலைவன். இங்கும் அல்லன செய்ய அஞ்சும் நாணத்தையே தலைவனின் (ஆணின்) பண்பாகச் சுட்டப்படுகிறது.

*"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்*
*பெண்ணின் பெருந்தக்கது இல்"*

என்னும் அவ்வதிகாரத்து உள்ள குறள் (7) பெண்ணின் பெருந்தகைமைப் பண்பை விதந்து பேசுகிறது.

'குறிப்பறிவுறுத்தல்' என்னும் அதிகாரத்தில்,

*"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை*
*நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு"*

என்னும் குறள் "முகைமொக்குள்ளே (அரும்பு) அடங்கி இருக்கும் மணம் போல் காதலியின் - தலைவியின் நகை அரும்பில் (புன்னகையில்) அடங்கியிருக்கும் (காமக்) குறிப்பு ஒன்றுள்ளது" என்னும் பெண்மையின் ஒண்மையான நுண்மைப் பொதிப்பு நெஞ்சில் பதித்து எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

பிற அறநூலில் (நாலடியாரில்) உள்ள, 'அங்கோட்டு அகல் அல்குல் ஆயிழையான்' (பொதுமகள்), ஆமா போல் நக்கி (காட்டுப் பசுவினைப் போல் நக்கி), தீப்பறக்கத் தாக்கி முலைபொருத் தண்சாந்து அணியகலம் (தீப்பொறி எழுமாறு பொது மகளிரின் கொங்கைகள் மோதப் பெற்றுச் சந்தனம் கலைந்த தலைவனின் மார்பு - தலைவியின் கூற்று) போன்றவற்றைக் காண்க.

பெண் உறுப்புகளின் (அல்குல், கொங்கைகள்) செயல்கள் (நக்குதல், பரத்தையரின் கொங்கைகள், தீப்பொறி பறக்கத் தலைவன் மார்பை தழுவுதல்) முதலான அசைப் பயன்பாடு திருக்குறளில் முப்பாலில் எங்கேனும் காட்ட முடியுமா? அதுதான் வள்ளுவத்தின் வானளாவிய நாகரிகப் பண்பாடு.

'பிறனில் விழையாமை'யில் பிறனில் விழைபவனின் கேடும் இழிவும் பழியும் பாவமும் குற்றமும் கொற்றவனின் தண்டனையும் வலியுறுத்தப்படுகின்றன.

'வரைவின் மகளிர்' என்னும் அதிகாரத்தில் ஆண்களுக்கே பரத்தமையால் விளையும் இழிதகைமையைப் பெரிதும் சுட்டிக்காட்டி, பரத்தமையையே இக்குமுகத்தில் ஒழிக்க உரத்துக் குரல் கொடுக்கிறார் திருவள்ளுவர்.

*"பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பார்*
*நண்ணேன் பரத்தநின் மார்பு"*

என ஒவ்வொரு பெண்ணும் (மனைவியும்) உறுதி பூண்டுவிட்டாள் ஆணுலகம் அல்வழிவிட்டு 'இல்' வழியாம் நல்வழி வரும். வள்ளுவமும் வெல்லும்.

இதுவரையில் கூறியவற்றால் முப்பாலில் எப்பாலிலும் பெண்களை இழித்துப் பேசும் புன்மை ஆலம் விதையளவும் இல்லை என்பது தெளிவாகப் புலனாகும்.

இனி மனுநூல் பெண்களை எவ்வாறெல்லாம் இழிவு படுத்துகிறது என்பதை அறிவோம்.

**மனுதர்ம சாத்திரம் : அத்தியாயம் 5 :**

எந்தப் பருவத்தினளாயினும், தனது இல்லத்திலே கூட எந்த பெண்ணும் தன்னிச்சைப்படி எச்செயலும் இயற்றலாகாது (கூற்று 147).

- இளமையில் தகப்பன், பருவத்தில் கணவன், விதவையான பின் மக்கள், இவர்கள் காவலின்றிப் பெண்கள் தம் இச்சையாக இயங்கலாகாது (கூற்று 148).
- இழிநடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை இவற்றை உடையவாயினும், கற்பினளான பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக (கூற்று 154).

**அத்தியாயம் 9 :**

- நிறைபிறழ்தலும், நிலையில்லா மனமும், நண்பின்மையும் மாதர்தம் இயல்பாவதால், கணவனால் நன்கு போற்றிப் புரக்கப்படும் போதும் அவர்கள் கணவனின் காவலை விரும்புவதில்லை (கூற்று 15).
- படுக்கை, ஆதனம், அழகுசெய்தல், காமம், சினம், பொய், துரோக எண்ணம் இவற்றை மாதரின் பொருட்டே மனு படைத்தார் (கூற்று 17).
- மாதர்க்குப் பிறவியைத் தூய்து ஆக்கும் சம்காரங்கள், மந்திர பூர்வமாகச் செய்வித்தல் யாதுமின்று. இவர்களுக்கு வெள்ளை உள்ளமும் இல்லை. பாவம் நீக்கும் மந்திர உபதேசமும் கிடையாது.

  எனவே, பொய்யைப் போல் மாசு வடுவினராக மாதர் இயன்றிருக்கின்றனர் (கூற்று 18).
- தன் தாய் மனத்தால் கற்பிழைந்தாள் என்றறிந்து ஒருவன் அதற்குக் கழுவாய் இயற்றுங்கால், "என் அன்னை நிறையிழந்து அயலான் இல்லம் சென்று, அவனைக்கண்டு மனத்தால் இச்சை உற்றிருந்தால், அவ் இச்சையால் அவளது உடலில் இளகிய பெண்மை நலத்தை என் தந்தை தனது வீரியத்தால் வென்று தூய்தாக்கக் கடவன்" என்று பிரார்த்திக்கிறான். இதிலிருந்தே மாதர் மன இயல்பு விளங்குகின்றது (கூற்று 20).
- இந்தக் கழுவாய் மனத்தால் விளைந்த மாசு நீங்கும் பொருட்டே.

  அதுவும் அத்தகைய தாய் வயிற்றில் பிறந் தமைக்காக மைந்தன் தனது பிறப்பின் தூய்மையை நாடியே அன்றி, அவளுக்கு அன்று (கூற்று 21).

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்."

"ஈன்றான் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்ற குறட்பாக்களின் முன்பு, மேற்கூறிய மனுவின் கருத்துகள் எவ்வளவு தலைகுனிய வேண்டும் என்பதை அறிக.

- பெரும்பாலும் மாதர் கற்பிலார் என்றே பெரிதும் பல நூல்களிலும் கூறப்படுவனவற்றையும் கேட்பீராக. (மனு.அத்.9, சூற்று 19).
- நிபீஜம் (ஆண்குறி), யோநி (பெண்குறி), இவ் இரண்டையும் நோக்குமிடத்து, பீஜம் உயர்வு. ஏனெனில் தோன்றும் உயிர் அனைத்தும். அதன் தன்மையைச் சார்ந்திருக்கிறது (சூற்று 35).
- நிசான்றாக, விதைக்கும் விதை அதே பயிரை அந்த நிலத்தில் விளைவிக்கிறது அல்லவா? (சூற்று 36)

மனு பெண்ணின் பெருமையைச் சிறப்பைப் பேசுகிறார் என்பதில் யாருக்கும் மறுப்பில்லை. ஆனால், அதையெல்லாம் அடியோடு அடித்துப்போடும் அளவுக்குப் பெண்ணின் பிறப்பை, தாய்மையை, பெண்ணுறுப்பை, பண்பிழப்பை, உரிமையை, கற்பினை வெளிப்படையாக இழிக்கும் பெருவெள்ள அருவருப்பைப் பாய்ச்சுகிறார் என்பதே ஏற்கப்பட வேண்டிய உண்மையாகும்.

**திருக்குறள் பெண்ணின் பண்பாட்டுச் சீர்மையை ஒளிர்விக்கும் நேர்மறை (வேதம்) ஆகும். மனுநூல் அதற்கு அப்பாற்பட்டு நிற்கும் எதிர்மறையாகும் என்பதைத் தமிழ்ப் பகைவர் அறிந்து தம் பிழைபடு எண்ணங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.**

# 'சமூக அறிவியல் சிந்தனையில் பெரியார்' நூல் வெளியீட்டு விழா



**த**ஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் முனைவர் சௌரா என்கிற சௌ. ராமகிருஷ்ணன் எழுதியுள்ள 'சமூக அறிவியல் சிந்தனையில் தந்தை பெரியார்' என்ற நூல் வெளியீட்டு விழா 23.01.2021 சனிக்கிழமை அன்று மாலை 5.00 முதல் 8.30 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

கவிக்குயில் மருத்துவர் மு.செல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழ் வாழ்த்துக்குப் பிறகு கோட்டை அம்பிதாசன் அனைவரையும் வரவேற்று, சிறப்பு அழைப்பாளர்களை அறிமுகப்படுத்தினார்.

சு.பாபு இராசேந்திரன் தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைத்தார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் துறைத் தலைவர் முனைவர் சி. தியாகராசன் முன்னிலை வகித்திட, தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் கோ. பாலசுப்பிரமணியன் நூலை வெளியிட்டு உரையாற்றினார்.

நூலின் முதற்படியை தொழில்முனைவர் அரிமா க. கார்த்திகேயன் பெற்றுக்கொண்டார். அறிஞர் வே. ஆனைமுத்து தொகுத்து வெளியிட்ட 'பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்' நூல் தொகுப்புக்குழு உறுப்பினர் - 'சிந்தனையாளன்' இதழ் ஆசிரியர் குழு உறுப்பினர் - பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளர் முனைவர் முத்தமிழ், பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள் தொகுப்பின் சிறப்பையும், வே. ஆனைமுத்து அவர்களின் பணியையும், நூலாசிரியரின் ஆய்வுப் பணியையும் சுட்டிக் காட்டி வாழ்த்துரை வழங்கினார்.


நிறைவாக, திமுக மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கவிஞர் கவிதைப்பித்தன் விழாப் பேருரை நிகழ்த்திட, நூலாசிரியர் சௌரா ஏற்புரையோடு நிறைவுற்றது.

பெரியாரிய - அம்பேத்கரியச் சிந்தனையாளர்கள், திராவிடர் கழக - திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், பொதுவுடைமை இயக்கத் தோழர்கள், தமிழிய - இலக்கிய ஆர்வலர்கள் என நூற்றுக்கணக்கான தோழர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

நூலாசிரியர் சௌரா, 'சிந்தனையாளன்' இதழ் வளர்ச்சி நிதியாக உருவா 1000 அளித்து மகிழ்ந்தார்.

- செய்தி : **முனைவர் சௌரா**

# மறைந்தார் கவிக்கொண்டல்



'மீண்டும் கவிக்கொண்டல்' இதழின் ஆசிரியர் 'கலை மாமணி' மா. செங்குட்டுவன் அவர்கள் தனது 93ஆம் அகவையில் 06.02.2021 வெள்ளி மாலை 5.30 மணியளவில் சென்னை அப்போலோ மருத்துவனையில் மறைந்தார்.

மா.பெ.பொ.க இயக்கத்தோடும், அய்யா ஆனைமுத்து வுடனும் நெருக்கமான தோழமை கொண்டவர். அய்யா ஆனைமுத்துவின் 60ஆம் அகவையில் 60 ஆயிரம் பண முடிப்பு வழங்கி, வடநாட்டில் மண்டல் குழு பயணத்திற்கு உதவிட விரும்பினார். ஆனால், அய்யா ஆனைமுத்து இந்த ஏற்பாட்டை அன்போடு தவிர்த்தார்.

93 வயதில் 71ஆண்டுகள் பத்திரிக்கைப் பணியில் ஈடு பட்டவர். 32 ஆண்டுகள் சொந்தமாக இதழ் நடத்தியவர். அண்ணாவின் நாளிதழ்களான 'மாலை மணி', 'நம்நாடு' 'கழகக்குரல்' ஆகியவற்றில் இணையாசிரியர்.

பெரியார், அண்ணா, கலைஞர், அன்பழகன், நெடுஞ் செழியன், வீரமணி, ஆனைமுத்து போன்ற திராவிட இயக் கத் தலைவர்களின் அன்புக்குரியவராக வலம் வந்தவர்.

திராவிடச் சிந்தனைகளைப் பரப்பிடும் நோக்கில் 15 நூல்களை எழுதியவர். 'அபேச்சகர்' என்ற சொல்லை 'வேட்பாளர்' என்றும், 'சென்னை நகர சபை' என்பதை 'சென்னை மாநகராட்சி' என்றும், 'மாயூரம்' என்ற ஊரின் பெயரை 'மயிலாடுதுறை' என்றும் மாற்றிடக் காரணம் ஆனவர் கவிக்கொண்டலே ஆவார்.

செருமன் நாட்டுக்குச் சுற்றுலா சென்றபோது அங்கு வாழும் தமிழர்கள் விருப்பத்தின் பேரில் 10ஆயிரம் நூல்களை செருமன் டோர்ட்மண்ட் நகரிலுள்ள நூலகத்திற்கு தன் சொந்தப் பொறுப்பில் அனுப்பி மகிழ்ந்தவர். இன்றும் அந்நூலகம் பாக்கியநாதன் என்பவரின் பொறுப்பில் சிறப்புடன் இயங்கிவருகிறது.

அகவை மூப்பின் காராணமாக மறைந்த அன்னாரின் உடல் சென்னை இராயப்பேட்டையிலுள்ள அவரின் மகன் வீட்டில் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தது.

மாபெபொக சார்பில் கலசம் ராமலிங்கம், தாம்பரம் மா. சுப்பிரமணி, மறைமலைநகர் க.பழனி, ஓஎன்ஜிசி ரவி, ஓஎன்ஜிசி சேகர், பிரதீப் ஆகியோரும் திராவிடர் கழகம் சார்பில் கவிஞர் கலி. பூங்குன்றன், அருள்மொழி மற்றும் நிர்வாகிகளும் வீரவணக்கம் செலுத்தினர்.

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தயாநிதி மாறன், மு.க. தமிழரசு, நே.சிற்றரசு, மேனாள் அமைச்சர் க.வேழவேந்தன் உள்ளிட்ட திமுக முன்னணி நிருவாகி களும், கவிஞர்கள் முத்துலிங்கம், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், மறைமலையான் உள்ளிட்ட திராவிட இயக்க எழுத்தாளர்களும், இலக்கியவாதிகளும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதோடு, அன்னாரின் புதல்வர்கள் தி.செ. அன்பரசு, தி.செ.மதிவாணன் புகழேந்தி, தி.செ.முத்துச் செல்வன் ஆகியோருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

- செய்தி : **தாம்பரம் மா.சுப்ரமணி**




பெரியார் பெரும்படையின் களப்பணியிலும், போராட்டங்களிலும் தலைவர்களாக விளங்கியவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் - நம் வடக்கு மாங்குடி அ. பால கிருட்டிணன். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் முதலாவது கொள்கைப் பயிற்சி வகுப்பினை, 1977-இல், வல்லம்படுகையில் நடத்திக் கட்சிக்குக் காலூன்றியவர். அ. பாலகிருட்டிணனின் தலைமகன் கடலூர் மாவட்ட மா.பெ.பொ.க செயலாளர் பா. மோகன், தோழர் வே. ஆனைமுத்துவின் பணிகளுக்குத் துணை நிற்பவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர். இவர்களின் இயக்கப் பணிகளுக்கெல்லாம் துணை நின்ற பேருழைப் பாளர் கனகு அம்மையார் 08.01.2021 வெள்ளிக் கிழமை அன்று அதிகாலை நம்மைவிட்டுப் பிரிந்தார்.

அம்மையாரின் படத்திறப்பு நிகழ்வு 24.01.2021 ஞாயிறு காலை 9.00 மணிக்கு வடக்குமாங்குடி பா. மோகன் இல்லத்தில் மா.பெ.பொ.க துணைப்பொதுச்செயலாளர் தி. துரைசித்தார்த்தன் தலைமையில் நடைபெற்றது. திரு. செக வீரபாண்டியன் அவர்கள் கனகு அம்மையாரின் படத்தைத் திறந்து வைத்தார். வி.எம்.எசு. சவுந்திரபாண்டியன், முனைவர் சி.இரா.இளங்கோவன், மரு. எ. செம்மலர் உள் ளிட்டோர் நினைவேந்தலுரை ஆற்றினர்.

**பேருழைப்பாளர் கனகு அம்மையாருக்கு வீரவணக்கம்!**

**- முனைவர் முத்தமிழ்**

# பெரியார் ஈ.வெ.ரா-வின் இலக்கு !

– பேராசிரியர் **த.செயராமன்**, தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

விடுதலைக்கு முந்தைய சென்னை மாகாணத்தின் பிரச்சனைகளையும், விடுதலைக்குப் பின் மொழிவாரி மாநிலங்கள் அமைந்த பிறகு தமிழ்நாட்டின் சமூக, அரசியல், பண்பாட்டு, பொருளியல் பிரச்சனைகளையும் கறாராகப் பேசிய பெரியார், பிரச்சனைகளுக்கான தீர்வையும் சுட்டிக்காட்டினார். ஒட்டுமொத்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு சென்னை மாகாணம் இந்தியாவிலிருந்து பிரிந்துவிடுவதுதான் என்றார். மொழிவாரி மாநிலங்கள அமைந்த பிறகு, தமிழ்நாடு இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிந்துவிடுவது ஒன்றே தீர்வு என்று வலியுறுத்தினார்.

திராவிடர் கழகத்தின் இலக்கைத் 'தமிழகத்தின் விடுதலை' என்றும், சுயமரியாதை இயக்கத்தின் இலக்கை 'மூடநம்பிக்கைகள் ஒழிப்பு' என்றும் வரையறுத்தார். தமிழ்நாடு விடுதலை அடைந்துவிட்டால் திராவிடர் கழகம் கலைக்கப்படும் என்றார்.

**இந்திய தேசியத்தையும், இந்தியா ஒரு நாடு என்பதையும், இந்தியர் ஓர் இனம் என்பதையும், கட்டோடு மறுத்தவர் பெரியார். இதுதான் பெரியார் அரசியலின் சாரம்.**

1928ஆம் ஆண்டு முதல் இந்திய தேசியத்தை ஏற்க மறுத்து, இந்தியத்தின்மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்ட பெரியார், சென்னை மாகாணத்தைத் 'திராவிட நாடு' என்று அழைத்து, திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்தார்.

01.11.1956 அன்று மொழிவழி மாநிலங்கள் அமைந்த உடனேயே, 05.11.1956 அன்று திராவிடர் கழகப் பொதுக் குழுவைக் கூட்டி, "இனி தமிழ்நாடு விடுதலையே இலக்கு" என்று வரையறுத்தார்.

இந்திய தேசியச் சகதியில் மாட்டி அழுந்திக் கொண்டிருக்கும் தமிழர்களை மீட்க படாத பாடுபட்டார் பெரியார் :

"பாழும் தேசியத்தால் தமிழர்களாகிய நாம் 50 ஆண்டுகளைப் பழாக்கிவிட்டோம். உதைக்கும் காலுக்கு முத்தம் இட்டுப் பூசை செய்கிறோம், மலத்தை முகருகிறோம், மானம் இழந்தோம், மாற்றானுக்கு அடிமையாகி வணங்குகிறோம்". ('குடிஅரசு' – தலையங்கம், 23.10.1938)

"... தமிழ்நாடும் பிற நாடுகளுக்கு, அதாவது ஆங்கிலேய நாடுகளுக்கு அடிமையாக இருப்பதுபோல், வட நாடுகளுக்கு அடிமையாய் இருப்பதிலிருந்து விடுபட வேண்டுமானால், தமிழ்நாட்டுக்குச் சுயநிர்ணய உரிமை இருத்தல் வேண்டும்" ('குடிஅரசு', 11.02.1940)

"தமிழனின் ஈன நிலைக்குக் காரணம் இந்து மதத்தைத் தனது மதம் என்று கருதியதும், இந்தியா பூராவையும் தன் நாடு என்று கருதியதும், இவ்விரண்டுக்கும் உழைக்கும் தொண்டே தேசத்தொண்டு என்று கருதியும் வருவதுமே ஆகும். இந்தியத் தேச அபிமானம் என்பது தமிழன் பல நாட்டாரின் நலனுக்கு உழைத்து, பல நாட்டாருக்கு அடிமையாய் இருப்பது என்பதாகும்."

"உலக நாடுகளை ஒப்பிடுகையில் தமிழ்நாடு பெரிது. உலகத்தில் 85 நாடுகள் உள்ளன. இவற்றில் 74 நாடுகளுக்கு மேல் பரப்பிலும் சரி, ஜனத்தொகையிலும் சரி மேலானவர்களாகவே நாம் இருக்கிறோம். மற்ற 74 நாட்டுக்காரர்கள் பிழைக்கும்போது, நம்மைத்தானா காக்கை தூக்கிக் கொண்டு போய்விடும்?"

**"நான் பிறந்த நாடு எனக்கு வேண்டும் என்று நான் கேட்கக் கூடாதா? எதைச் செய்தாலும் சகித்துக்கொள்வேன்; ஆனால், நாடு பிரிவதை மட்டும் சகிக்கமாட்டேன் என்பது எவ்வளவு திமிர் ?..."**

"நம் நாடு தனியாகப் பிரிந்தே ஆகவேண்டும். ஒரு சுண்டைக்காய் 'எகிப்து' உலகத்தையே கலக்கிவிட்டதே! நம்மால் முடியாதா? நான் சொல்லுகிறேன். பிரிந்தால் – நாம் சிறந்த வல்லரசாக வாழ்வோம்" ('விடுதலை', 01.12.1957)

தம் இறுதிக்காலத்திலும்கூட, பெரியாரின் 95ஆவது பிறந்தநாள் மலரில் (17.09.1973) பெரியார் இவ்வாறு பதிவு செய்தார் : "நாம் உடனடியாக விடுதலை பெற்று, இந்தியக் கூட்டாட்சியிலிருந்து விலகி, சுதந்தரத் தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம். சுதந்திரத் தமிழ்நாடு எனது இலட்சியம் என்ற சொற்களை ஒவ்வொருவரும் இலட்சியச் சொல்லாகக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன்."

பெரியார் வாழ்ந்த காலத்தை விடவும் இப்போது தமிழகத்தின் உரிமைகள் மீதான, தமிழ்மொழியின் மீதான, தமிழ்ப் பண்பாட்டின் மீதான, தமிழர் வாழ்வாதாரங்கள் மீதான, இந்துத்துவ, பார்ப்பன – பனியா இந்தி தேசியத் தாக்குதல் பலமடங்கு அதிகரித்துள்ளது.

பெரியாரியவாதிகள் பெரியார் கூறிய தீர்வைத் தமிழகத்திற்கு அளிக்க முன்வரவேண்டும். பெரியார் கூறிய தீர்வு உண்மையில் ஒரு தமிழ்த்தேசியவாதி முன்மொழிய வேண்டியத் தீர்வு ஆகும். திராவிடம் பேசிய பெரியார் எட்டு அடி பாய்ந்தால், தமிழ்த் தேசியம் பேசுவோர் பதினாறு அடி பாய்வார்கள்தானே! பாயவேண்டும்தானே!

**தமிழ்த் தேசிய அரசியல் என்பது தமிழ்நாட்டின் விடுதலை அரசியல்தான். அதையன்றி இன்னொரு பொருள் அச் சொல்லுக்குக் கிடையாது. தமிழ்த்தேசியம் என்பது இந்தியத்துக்குள் அடங்கிய இணக்க அரசியலான தேர்தல் அரசியலில் ஈடுபடாது. அப்படி ஈடுபட்டால் அது தமிழ்த்தேசியம் அல்ல என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். திராவிடம் பேசிய பெரியாரே தமிழ்நாட்டின் விடுதலை கோரி இயங்கியிருக்கும் நிலையில், தமிழ்த்தேசியம் பேசுவோர் தமிழ்நாட்டின் விடுதலைக் கோரிக்கையை உயர்த்திப்பிடிக்க வேண்டும். சுதந்தரத் தமிழ்நாட்டை வென்றெடுக்க முனைய வேண்டும். தமிழ்த் தேசியர்கள் தமிழ்த்தேச விடுதலைப் போராட்டத்தை வீரியத்துடன் முன்னெடுப்பதைத்தான் தமிழ்ச் சமூகம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது!**



# அரசும் நீதிமன்றமும் ஆடும் நாடகமா..?
# எழுவர் விடுதலை!



தனக்கு முடிவெடுக்க அதிகாரமற்ற ஒரு விவகாரத்தில் மனுவை வாங்கி வைத்துக்கொண்டு வருடக்கணக்கில் கமுக்கமாக இருந்த தமிழக ஆளுநரின் பெருந்தன்மையை என்னென்பது?

அவருக்கு அதிகாரம் இருக்கிறதா எனத் தெளிவு பெறாமலே அவரிடம் ஒரு மனுவைத் தந்து வருடக் கணக்கில் காவடிதூக்கி, கை கூப்பிய ஆட்சியாளர்களின் ஆண்மையை என்னென்பது?

முடிவெடுக்கும் அதிகாரம் இல்லாத ஆளுநர் மூன்று நாட்களில் முடிவெடுப்பார் என நீதிமன்றத்திற்கு உத்தர வாதம் வழங்கிய மத்திய அரசின் சொலிடர் ஜெனரலின் சட்ட அறிவை என்னென்பது?

முடிவெடுக்க அதிகாரமில்லாத ஆளுநருக்கு ஒரு வாரக் கெடு கொடுத்து, ஐயா உடனடியாக முடிவெடுத்துச் சொல்லுங்கள் என வாய்ப்பளித்த உச்சநீதிமன்றத்தின் அறியாமையை என்னென்பது?

அதிமுகவும், திமுகவும் எழுவர் விடுதலையில் ஒன்று பட்டுக் குரல் கொடுக்க முடியாமல் ஒருவருக்கொருவர் குற்றப்பத்திரிக்கை வாசிக்கும் குதர்க்க அரசியலை என்னென்பது?

அரசியல்வாதிகள் மக்களை அடிக்கடி முட்டாளாக்கிய சம்பவங்கள் அனேகம் உண்டு!

ஆனால், அங்கீகாரம் பெற்ற சட்ட அதிகாரப் பதவியில் உள்ளவர்களும், நீதி அமைப்புகளும் சேர்ந்து மக்களை முட்டாளாக்கிய சம்பவம் அநேகமாக இதுவாகத்தான் இருக்கும்!

வெறுப்பு, வன்மம் ஆகியவற்றை நாம் தொலைக்கத் துணியவில்லை என்பதன் அடையாளமாகத்தான் அவர்களின் விடுதலை தாமதமாவதை புரிந்துகொள்ள முடிகிறது!

அவர்கள் விடுதலை தள்ளிப்போவது நவீன சமூகத் திற்கே அவமானமாகும்!

நினைவுபடுத்துகிறேன்; மகாத்மா காந்தியைக் கொன்ற கோட்சேவின் தம்பி கோபால் கோட்சே, விஷ்ணு கோட்சே, மதன்லால் பாவா ஆகியோர் 16 ஆண்டுகளில் ஆயுள் தண்டனை முடிந்து வெளியானார்கள்!

**காந்தி கொலைச் சதியில் ஈடுபட்டு விடுதலையான அந்தக் குற்றவாளி கள் எல்லோரும் பிராமண சமூகத் தினர் என்பதை கவனப்படுத்துவதை என்னால் தவிர்க்க முடியவில்லை!**

அந்த காந்தி கொலைச் சதி யாளர்கள் தங்கள் இறுதி மூச்சு உள்ளவரையில் காந்தி கொலை யில் சம்பந்தப்பட்டதை மறுக்கவோ, மன்னிப்பு கேட்கவோ தயாராக இல்லாதிருந்தார்கள் என்பதை நீதிமன்றமும், நாடும் அறிந்தே இருந்தது!

இவ்வளவு அறிந்தும் காந்தியின் சீடர்கள் இன்றுவரை அந்த விடுதலையை எதிர்த்துக் கருத்து தெரிவிக்கவில்லை!

அதுதான் காந்தி கற்றுத்தந்த அகிம்சை, சகிப்புத் தன்மை என்ற தத்துவங்களின் வலிமையாகும்!

இராஜிவ் கொலை சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் விடயத்தில் சோனியா அம்மையாரும், ராகுலும், பிரியங்காவும் வன்மத்தை வெளிப்படுத்தாமல், "நீதி மன்றத் தீர்ப்பை ஏற்கிறோம்!" எனக் கூறிவிட்ட நிலையில் உச்சநீதிமன்றம் விடுவிக்கக் கட்டளையிட்ட பிறகும் ஆளுநரின் கைகளைக் கட்டிப்போட்டு மத்திய பாஜக அரசு ஆடும் நாடகத்தை என்னென்பது..?

இராஜிவ்காந்தி கொலை கடுமையான கண்டனத்திற் குரியது. அதற்காக அதில் குற்றம் சாட்டப்பட்டவர்களை மனிதாபிமானமின்றி வருடக்கணக்கில் சிறுகச் சிறுக சித்திரவதைப்படுத்திக் கொல்வது அநீதியானது!

உச்சபட்ச தண்டனைக் காலம் முடிந்த நிலையில், அவர்களை விடுவிக்கக் கோருவது இராஜிவ் கொலைக்கு ஆதரவானதாகிவிடாது.

மனிதநேயத்தை வாழ்வியல் அறமாகக் கொண்ட ஒரு தேசம் அவர்களின் விடுதலையைத் தவறான கண்ணோட் டத்தில் அணுகாது!


இந்த எழுவர் விடுதலையானது வெறும் தமிழர்களின் கோரிக்கையாக மட்டுமின்றி, அகில இந்தியக் குரலாக வலுப்பெற வேண்டிய காலம் கனிந்துவிட்டது என்றே தோன்றுகிறது!

இது ஏதோ பிராந்தியவாதக் கோரிக்கையல்ல!

ஆன்ம நேய பலத்தில் இந்தியாவின் மதிப்பீட்டைக் கோரும் பிரச்சனை என்றே தோன்றுகிறது!

**– சாவித்திரி கண்ணன்**

நன்றி : **'அறம்' இணைய இதழ்**




# பாவலரேறு
# பைந்தமிழ்ப் பயிற்றகம்

**மேடவாக்கம், சென்னை - 600100.**

## தமிழ்ப் புலவர் படிப்பு
**(அஞ்சல் வழி)**

தமிழ் இலக்கியம், இலக்கணம்
பயில விரும்பும் தமிழ் ஆர்வலர்களுக்காகத்
தமிழ்ப் புலவர் படிப்பை
அஞ்சல் வழியாக நடத்துகின்றோம்.
தமிழார்வம் உள்ள எவரும் சேரலாம்.
அகவை(வயது) தடையில்லை.
இப்போது வேறு படிப்பு படித்துக்கொண்டு
இருப்பவர்களும் சேரலாம்.

**மேலதிக விளக்கம் பெற**

**முனைவர் கி. குணத்தொகையன்**

அலைபேசி : **99414 92701**


## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - பிப்ரவரி 2021

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **ஆ. தேன்மொழி** | மாதவரம், சென்னை | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **ஆறு. கலைச்செல்வன்** | மஞ்சக்கொல்லை | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - பிப்ரவரி 2021

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Edited and Published by **V. ANAIMUTHU** on behalf of **Marxist Periyarist Communist Party**
No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-600 050.
and Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street),
Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and